174

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

அஹ்காமுல் முஸ்லிமீன்

ஷாபிஇய்யா.

இஃது

மதறாஸ் திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

அவர்களால்

முக்தஸறாக, ஷாபீ மதுஹபுக்கு அவசியமான

ஹுக்முகளைச் சேகரித்து அறபுத் தமிழில்

அச்சிட்டு வளங்கி வந்ததை

தமிழ் தெரிந்த நண்பர்களுக்கென்று தமிழ்ப்படுத்தி

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

சுத்தப் பதிப்பு.

1947 [ரூ. 1-0-0.

...ஜிஸ்டர் செய்யப்பட்டது.

Q7:3
N47
111147

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

அஹ்காமுல் முஸ்லிமீன்

ஷாபி இய்யா.

இஃது

மதறாஸ் திருவல்லிக்கேணி,

ஹாஜி மோ. அ. ஷாஹுல் ஹமீது லெப்பை

அவர்களால்

முக்தஸறாக, ஷாபீ மதுஹபுக்கு அவசியமான

ஹுக்முகளைச் சேகரித்து அறபுத் தமிழில்

அச்சிட்டு வழங்கி வந்ததை

தமிழ் தெரிந்த நண்பர்களுக்கென்று தமிழ்ப்படுத்தி

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

சுத்தப் பதிப்பு.

இதன் விலை] 1947 [ரூ 1-0-0.

ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

அஹ்காமுல் முஸ்லிமீன்.

ஷாபி இய்யா.

அவ்வல் கலிமாத் தையிபு.

(லாயிலாஹ இல்லல்லாஹு) வணக்கத்திற்குப் பாத்திரவான் யாருமில்லை அல்லாஹுத் தஆலாவைத் தவிர (முஹம்மதுர் றசூலுல்லாஹி) முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அல்லாஹுத் தஆலாவுடைய திருத்தூதரா யிருக்கும்.

இரண்டாங் கலிமா ஷஹாதத்து.

(அஷ்ஹது) பிசகறவறிந்து விண்ணப்பஞ் செய்கிறேன் (அன்லாஇலாஹ இல்லல்லாஹு) உண்மையாக வணக்கத்திற்கு பாத்திரவான் யாருமில்லை அல்லாஹுத் தஆலாவைத் தவிர, (வஹ்தஹு) அவன் தனியவன் (லாஷரீக்க லஹு) அவனுக்கு யாதொரு இணையுமில்லை. (வஅஷ்ஹது) இன்னும் பிசகற வறிந்து விண்ணப்பஞ் செய்கிறேன்; (அன்னமுஹம்மதன்) உண்மையாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மாகிறவர்கள் (அப்துஹு) அவனுடைய உரிய அடியாருமாய் (வறசூலுஹு) அவனுடைய திருத்தூதருமா யிருக்கும்.

மூன்றுங் கலிமா தம்ஜீது.

(சுப்ஹானல்லாஹி) அல்லாஹுத் தஆலாவைத் துய்தாக்கிறதாகத் துய்தாக்கிறேன். (வல்ஹம்து லில்லாஹி) எல்லாப் புகழும் அல்லாஹுத் தஆலாவுக்காயிருக்கும். (வலாஇலாஹ இல்

லல்லாஹு) வணக்கத்திற்குப் பாத்திரவான் யாருமில்லை அல் லாஹுத் தஆலாவைத் தவிர (வல்லாஹு அக்பர்) அல்லாஹுத் தஆலா மிகவும் பெரியவன் (வலாஹவ்ல) யாதொரு பாவத்தை விட்டுந் திரும்புதலுமில்லை. (வலாக் குவ்வத்த) யாதொரு இபா தத்தின் பேரில் பலனு மில்லை. (இல்லா பில்லாஹில் அலிய்யில் அலீம்.) வனுப்பமாகிய உயர்த்தியாகிய அல்லாஹுத் தஆலாவின் உதவி கொண்டொழிய.

நாலாங் கலிமாத் தவ்ஹீது.

(லாயிலாஹ இல்லல்லாஹு) வணக்கத்திற்குப் பாத்திரவான் யாருமில்லை அல்லாஹுத் தஆலாவைத் தவிர. (வஹ்தஹு) அவன் தனித்தவன் (லாஷரீக்க லஹு) அவனுக்கு யாதொரு இணையுமில்லை. (லஹுல் முல்கு) அவனுக்குடையதா யிருக்கும் இராஜாங்கம். (வலஹுல் ஹம்து) அவனுக்கா யிருக்கும் எல்லாப் புகழும் (யுஹ்யீ) மவுத்தானவர்களை ஹயாத்தாக்குவான், (வயு மீத்து) ஹயாத்தானவர்களை மவுத்தாக்குவான். (பியதிஹில் கைறு) அவன் வசமாயிருக்கும் நலவடங்கலும். (வஹுவ அலாக்குல்லி ஷைஇன் கதீற்) அவனுகிறவன் வஸ்துக்களடங்கலின் பேரிலும் மிக்கத்திராணி பெற்றவன்.

ஐந்தாங் கலிமா றத்துல் குப்றி.

(அல்லாஹும்ம) யா அல்லா! (இன்னீ அஊது பிக்க மின் அன் உஷ்ரிக்க பிக்கஷைஅன் வஅன அஃலமு) நான் அறிந்தவனாக அறவே உன்னைக்கொண்டு பிணை வைக்கிறதை விட்டும் உண்மை யாக உன்னைக்கொண்டு காவல்பாடு தேடுகிறேன். (வஅஸ்தக்பிறுக் கலிமாலா அஃலமு) நான் அறியாமல் செய்த பாவத்துக்கு உன் னிடத்தில் பிழைபொருக்கத் தேடுகிறேன். (இன்னக்க அன்தல் அல்லாமுல் குயூப்) உண்மையாக நீ யாகிறவன் இரகசியங்களை மிகவு மறிந்தவன். (துப்த்து அன்ஹு) உன்னை கொண்டு பிணை வைக்குத லென்னும் ஷிறுக்கை விட்டும் தவ்பாச்செய்து மீண்டேன் (வத்த பற்றஃத்து அன்குல்லிதீனின் ஸிவாதீனில் இஸ்லாம்) தீனுல் இஸ் லாமைத்தவிர மற்றும் மார்க்க மடங்களை விட்டும் நீங்கிவிட்டேன்.

(வஅஸ்லம்து வஅகூலு லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி) (யஃனீ) "லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி" என்று சொன்னவனாக இஸ்லாமாகிவிட்டேன். இதை அந்தியுஞ் சந்தியுமோதுகிறது குப்றை விட்டும் நீங்குவதற்கு ஸபபாயிருக்கும்.

முதலாவது பிள்ளைகளுக்கு படித்துக் கொடுப்பது.

தமீஸுள்ள (யஃனீ) தன்னாலே தின்னக்குடிக்க மலஞ்ஜலத்துக்கிருந்தால் தன்னாலே துப்புரவு செய்ய விபரமறிந்த பிள்ளைகளுக்கு "எங்கள் நபி நாயகம் முஹம்மது நபி மக்காவில் பிறந்து அவ்விடத்தில் கல்குகளளவில் நபியாகவும் றசூலாகவு மனுப்பப்பட்டு மதீனத்துக்கு ஹிஜ்றுப்போய் அவ்விடத்தில் வபாத்தாக்கி யடக்கப்பட்டார்கள். அவர்கள் சிவப்பைக்கொண்டு கலக்கப்பட்ட வெண்மையானவர்கள் மனிதர்களுக்கெல்லாம் படை கோலத்தாலும், நடத்தையாலும் குணத்தாலும் சிறப்பமானவர்கள், வமிசம் குறைஷியானவர்கள். அவர்கள் தாயார் பேர் ஆமினாஉம்மா, தகப்பனார் பேர் அப்துல்லா, பாட்டனார் பேர் அப்துல் முத்தலிபு, பூட்டனார் பேர் ஹாஷிம், முப்பாட்டனார் பேர் அப்துல் முனாப்" என்று படித்துக்கொடுக்க வேண்டும்.

பிள்ளைகள் மீது தாய் தந்தைகளுக்கு வாஜிபாகுங் கருமங்கள்.

பிள்ளைகளுக்கு சிறுவயதிலேயே குறுஆன் ஷரீபு, ஈமான், இஸ்லாம் முதலிய தீனுடைய இல்முகளைக் கற்பிக்கிறதும் தொழுகை, நோம்பு முதலிய இபாதத்துகளைக் கொண்டேவுகிறதும் தாய் தகப்பன் முதலிய சவரட்சணைக்காரர்கள் பேரில் வாஜிபாயிருக்கும்.

இல்மை படிக்கிறது ஆண் பெண் அடங்கல் பேரிலும் விதியாகிறது.

அல்லாஹுத் தஆலா குறுஆன் ஷரீபில் திருவுளம் பற்றினான்:—(வயற்ப இல்லாஹுல்லதீன ஆமனூ மின்க்கும் வல்லதீன

ஷத்துல் இல்ம தறஜாத்தின்) (யஃனீ) "உங்களில் ஈமான்கொண்டார்களே அவர்களுடைய தறஜாவை நான் உயர்த்தியாக்கி வைப்பேன், இன்னும் அந்த முஃமினான ஜனங்களில் இல்மைக் கொடுக்கப்பட்டுதே அவர்களுடைய தறஜாவைமிகவு முயர்த்தியாக்கி வைப்பேன்" என்று.

ஹதீது.

இல்மைப்படிக்கிறது முஸ்லிமான ஆண் பெண் அடங்கலின் பேரிலும் கடமையாயிருக்கும். (யஃனீ) ஒரு மனிதன் ஆக்கில் பாலிகாய் விட்டால் அவனுக்கு முக்கியமாகிய பிக்ஹுடைய யில்மைப் படிக்கிறதும், தொழுகைக்குப்போதுமான மட்டிலும் குறுஆனைப் படிக்கிறதும் பறுலாயிருக்கும்.

இன்னுமொருவன் இல்மைப் படிக்க நாடி காலில் மிதியடி போடுவானாயின் அவன் காலடி யெடுத்து வைப்பதற்கு முன் அல்லாஹுத் தஆலா அவன் முன் செய்த பாவங்களடங்கலையும் பொறுப்பான். இன்னும் அல்லாஹுத் தஆலா குறுஆன் ஷரீபில் திருவுளம் பற்றினான்.

அதாவது:—பஸ்அலூ அஹ்லஸ்ஸிக்ரிஇன்குன்த்தும் லாத்தஃலமூன் (யஃனீ) "ஓ மனிதர்களே! நீங்கள் அறியாதவர்களாயிருப்பீர் களாகில் அறிந்தவர்களிடம் படித்துக் கொள்ளுங்கள்" என்று. ஆகையால், இதனால் அறியாதவர்கள் அறிந்தவர்களிடம் கேட்டுப் படிப்பது வாஜிபென்று அறியலாயிற்று.

தீனுடைய இல்முகள் மூன்று வகைப்படும்.

இல்முகள் அநேகமுண்டு, அதில் முக்கியமாய் கற்றுக்கொள்ள வேண்டியவை தீனுடைய இல்மாயிருக்கும். ஆகையால், அதில் மூன்று வகையுண்டு. முதலாவது:—பிக்ஹுடைய இல்மு அதாவது ஏவலின்னது, விலகலின்னது, பறுலின்னது, வாஜிபின்னது. ஹலாலின்னது, ஹறாமின்னதென்று விளங்கி யறிகிறதாயிருக்கும். இரண்டாவது:—குறுஆன் ஷரீபுடைய மஃனா அதன் தப்ஸீறுடைய பயானை யறிகிறதா யிருக்கும். மூன்றாவது:—நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய ஹதீது

ஷரீபுகளை யறிகிறதாயிருக்கும். மவ்லானா றாமீ ஜலாலுத்தீன் றஹிம ஹுல்லா சொல்கிறார்கள்; "இந்த மூன்று இல்லைமயுமறிந்தவர்கள் தீனுடைய உலமாக்களாயிருக்கும்" என்று.

ஷறஉடைய ஹுக்முகளில் ஆகுமானவைகள் ஐந்து.

முதலாவது :—பறுலு, அதாவது குருஆன் ஹதீது இவைகளின் அத்தாக்ஷியால் ஏவல் தரிப்பட்ட செய்கை, அதைச் செய்தால் ஸவாபு கிடைக்கும். உஸ்றன்றி விட்டால் பெரும்பாவம், அதிக வேதனை கொடுக்கப்படும். எல்லா இமாம்களும் ஒத்துமையான பறுலை அல்லத்தட்டினவன் காபிறுவான். (நஊது பில்லாஹி மின்ஹா).

இரண்டாவது :—வாஜிபு. அதாவது பல அருத்தங் கொள்ளும்படியான அத்தாக்ஷியால் ஏவல் தரிப்பட்ட செய்கை, அதைச் செய்கிறதால் ஸவாபிலும், விடுகிறதால் அதாபிலும் பறுலைப் போலாயிருக்கும். அதை அல்லத் தட்டினவன் காபிறுகமாட்டான். என்கிலும் பெரும்பாவியானவன்.

மூன்றாவது :—ஸுன்னத்து. அதாவது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் ஒருவிடுத்தம் இரண்டு விடுத்தம் விட்டு மற்ற நேரங்களெல்லாம் நடத்தி வந்த செய்கை அதைச்செய்தால் ஸவாபு. உஸ்ரில்லாமல் வழமையாக விட்டால் அந்தஇரண்டுக்கும் தணிந்த அதாபு. "என்னுடைய சுன்னத்தை விட்டவன் என் ஷபாஅத்தைபெற்றுக் கொள்ள மாட்டான்" என்று ஹதீதில் வந்திருக்கிறது.

நான்காவது :—முஸ்தஹப்பு. அதாவது, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஒரு விடுத்தம் இரண்டு விடுத்தம் செய்து நேரம் விட்டு வந்த செய்கை. அதைச்செய்தால் தவாபுண்டு, விட்டால் அதாபில்லை.

ஐந்தாவது :—முபாஹு. அதாவது, செய்கிறதும் விடுகிறதும் சம்மந்தங் கொடுக்கப்பட்ட செய்கை. அதைச் செய்தால் ஸவாபு மில்லை, விட்டால் அதாபு மில்லை.

ஷறஉடைய ஹுக்முகளில் ஆகுமானவை மூன்று

முதலாவது :—ஹறாம். அதாவது, பலவந்தமாகிய பல அருத்தங் கொள்ளாத அத்தாக்ஷியால் விலக்குவதும்கொஞ்சமேனும் ஆகும் என்கிற அத்தாக்ஷி அதில் நின்றிடாமல் யிருக்குமே, அப்படிக் கொற்ற செய்கை, அதைச் செய்தால் பெரியஅதாபும், விட்டால் ஸவாபும் கிடைக்கும். எல்லா இமாம்களும் ஹறாமென்கிறதில் ஒத்துமைபானதை ஆகுமென்று சொன்னவன் காபிறாகி விடுவான். (ஈஸனதுபில்லாஹி மின்ஹா.)

இரண்டாவது :—மக்றாஹ். அதாவது, வேறொருதலீல் ஆகு மென்கிறது தரிபட்டிருக்கிறதுடன் விலக்கென்பது பலவந்த மான அத்தாக்ஷியால் தரிபட்ட செய்கை, அதைச் செய்தால் வேதனையும் விட்டால் ஸவாபுங் கிடைக்கும். ஆகுமென்று சொன்னால் காபிறாகான். ஆனால், மக்றாஹி லிரண்டு வகையுண்டு. அதாவது மக்றாஹுத் தஹ்ரீமென்றும், மக்றாஹு தன்ஸீஹென் றுஞ்சொல்லப்படும். மக்றாஹுத் தஹ்ரீமாகிறது ஹறாமுக்குச் சமீபமானது; மக்றாஹுத் தன்ஸீஹானது ஹலாலுக்குச் சமீ பமானது.

மூன்றாவது :—முப்ஸிது. அதாவது; செய்த அமலை முறிக் கும் படியான செய்கை. அந்த முப்ஸிதான செய்கையைமன முரண்டாகச் செய்தால் வேதனை. மறதியாகச் செய்தால் வேதனை யில்லை.

பறுலு இரண்டு வகைப்படும்.

முதலாவது :—பறுலு ஐன் அதாவது; அல்லாவைக் கொண்டு ஈமான் கொள்வது. தொழுகை, ஸகாத்து, நோன்பு, ஹஜ்ஜு யிவைகளை ஒவ்வொருவரடங்கலின் பேரிலும்தனித்தனியே விதிக் கும். ஒருவர் செய்கிறதைக்கொண்டு மற்றவர்களை விட்டும் விழமாட்டாது.

இரண்டாவது :—பறுலூக் கிபாயா, அதாவது மய்யித்துத் தொழுகை, குறுஆனை ஹிப்லு செய்கிறதுபோல் மொத்தமாக எல்லா பேரிலும் விதிக்கும். சிலர் செய்தால் எல்லாரை விட்

டும் விழுந்துபோம். ஒருவருஞ் செய்யாவிட்டால் எல்லோரும் பாவியாவார்கள். இனி பறுலுஐனுகிறது, பறுலுக் கிபாயாவைக் காண ஏற்றம். பறுலு கிபாயாவோ வாஜிபைக்காண ஏற்றம் வாஜிபோ சுன்னத்து முஅக்கதாவைக்காண ஏற்றம்.

தீனுடைய பயானைபற்றிப் பேசுவது.

அல்லாஹுத் தஆலா குறுஆன் ஷரீபில் திருவுளம் பற்றினான், (இன்னத்தீன இன்தல்லாஹில் இஸ்லாம்) "திட்டமாக தீனென்பது இஸ்லாமெனும் வழிப்பாடா யிருக்கும்" என்று. ஆனால், தீனெனுஞ் சொல்லுக்கு முப்பொருளுண்டு. முதலாவது வழிப்பாடு; இரண்டாவது வழக்கம்; மூன்றாவது கூலி; ஆக முப்பொருளையும் பொதிந்ததுதான் தீனென்னும் மார்க்கமாயினதாம். இன்னும் திருவுளமாயிருக்கிறான் (இன்னல்லாஹஸ்த்தபா லக்குமுத்தீன பலாத மூத்துன்ன இல்லா வஅன்த்தும் முஸ்லிமூன்) "திட்டமாக அல்லாஹுத் தஆலா உங்களுக்கு தீனுல் இஸ்லாமைத் தெரிந்து தந்தான். ஆனதால், முஸ்லிமானவர்களல்லாதிருக்கிற ஹாலில் மரணிக்க வேண்டாம்" என்று. ஆகையால், அல்லாஹுத் தஆலா நம் அனைவர்கள் பேரிலும் கிருபையென்னும் றஹ்மத்தைப் பொருந்தி தீனுல் இஸ்லாமெனும் செவ்வொத்தமார்க்கத்தின் பேரில் தரிபடுத்தி நல்லுதவி புரிவானாகவும்.

தீனென்னும் எடுப்புக்கு தூண்கள் நான்கு.

தீனென்னு மெடுப்புக்கு நான்கு றுக்னுகளெனும் தூண்களுண்டு முதலாவது :—ஈமானென்னும் உண்மை கொள்ளுதல். இரண்டாவது :—வழிபாடென்னும் இஸ்லாம். மூன்றாவது :— ஓர்மைப் படுத்துதலெனும் தவ்ஹீது. நான்காவது :—அல்லாஹுத் தஆலாவை யறியுதலென்னும் மஃரிபா. இந்த நாலுங் கூடித்தான் தீனென்றாயின. ஆகையால், யாராகிலும் மொருவன் இந்த நாலிலொன்றைப் பேதலிக்கின் அவனுடைய தீன் பேதகமாய்விடும். (ஹஸ்தன னல்லாஹு மின்ஹா.)

பாபுன் பீ பயானில் ஈமான்.

ஈமானுடைய பயானைப்பேசும் பாடம். ஈமானுகிறது, (தஸ்தீகுன் பில்கல்பி வஇக்ருறன் பில்லிஸான்.) "அல்லாஹுத் தஆலாவையும், அவனுடைய றசூலையும் ஹிருதயத்தால் உண்மை கொள்கிறதும், அப்பிரகாரம் நாவால் விண்ணப்பஞ் செய்கிறதுமாயிருக்கும். ஈமானுடையசிபத்தாகிறது முஜ்மலெனும் விவரிக்கப்படாத ஈமானென்றும், முபஸ்ஸலெனும் விவரிக்கப்பட்ட ஈமானென்று மிரண்டுவகைப்படும்.

முஜ்மலாகிய விவரிக்கப்படாத ஈமானுகிறது.

(லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி) (எஃனி) வணக்கத்திற்குப் பாத்திரவான் யாருமில்லை அல்லாஹுத் தஆலாவை தவிர, முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அல்லாஹுத் தஆலாவுடைய திருத்தூதராயிருக்குமென்பதாம்.

முபஸ்ஸலாகிய விவரிக்கப்பட்ட ஈமானுகிறது.

(ஆமன்த்துபில்லாஹி) அல்லாஹுத் தஆலாவைக் கொண்டு ஈமான் கொண்டேன். (வமலாயிக்கத்திஹி) அவனுடைய மலக்குகளைக் கொண்டு ஈமான் கொண்டேன் (வகுத்பிஹி) அவனுடைய வேதங்களைக் கொண்டு ஈமான் கொண்டேன். (வறுஸுலிஹி) நபிமார் றசூல்மாரடங்கலைக்கொண்டு ஈமான் கொண்டேன் (வல்யவ்மில் ஆகிரி) ஒடுக்கத்து நாளைக்கொண்டு ஈமான் கொண்டேன். (வல்கத்ரி கைரிஹி வஷர்ரிஹி மினல்லாஹித் தஆலா) அல்லாஹுத் தஆலாவில் நின்றும் நலவாகிய கட்டளைகள் தீங்காகிய கட்டளைகளடங்கலைக் கொண்டும் ஈமான் கொண்டேன் என்பதாம். இக்கலிமாக்களிற் சொல்லப்பட்டிருக்கிற ஆறு காரியங்களும் ஈமானுடைய ஷறுத்துகளாயிருக்கும்.

ஈமானில் முந்தின ஷறுத்து.

ஈமானில் முந்தின ஷறுத்தாகிறது அல்லாஹுத் தஆலாவைக்கொண்டு ஈமான்கொள்கிறது. அதில் அல்லாஹுத் தஆலா

வுக்கு (வாஜிபாகிய) தரிபாடாகிய, ஸிபாத்துகள் இருபதையும், அதற்கு மாற்றமாகிய முஸ்தஹீலத்தான ஸிபாத்துகள் இருபதையும், இந்த இருவகை ஸிபாத்துகளையும் தவிர ஜாயிஸான ஸிபாத்துகளையும் அறிந்து ஈமான் கொள்கிறது.

அல்லாஹுத் தஆலாவுக்கு வாஜிபாகிய ஸிபாத்து இருபதுக்கும் விபரம்.

அல்லாஹுத் தஆலா ஒருவன். அவனுடைய உள்ளமைகளிலும், வர்ணிப்புகளிலும், திருநாமங்களிலும், செயல்களிலும் இணைதுணை இல்லையென்றும் அவனுக்குத் தரிபாடான ஸிபாத்துகளிருபது அவையாவன :—(உஜூதுன்) உள்ளமை, (கதீமுன்) பூர்வீகம் (பகா) என்றைக்குந் தரிபாடு, (முகாலபத்துன் லில்ஹவாதிஸி) புதியதுகளுக்கு ஒவ்வா வண்ணமாயிருக்கிறது. (கியாமுஹு பினப்ஸிஹி) அவன் தன்னைக்கொண்டு நிலைபாடாயிருக்கிறது. (வஹ்தானியத்து) அவன் ஒருவனென்கிறது (ஹயாத்து) ஜீவன் (இல்மு) அறிவு, (இறாதத்து) நாட்டம், (குத்றத்து) தத்துவம், (ஸம்வு) கேள்வி, (பஸறு) பார்வை, (கலாம்) பேச்சு, (ஹையுன்) உடலன்றியே ஜீவனுடையான், (ஆலிமுன்) கல்பன்றியே அறிவுடையான், (முரீதுன்) நப்ஸன்றியே நாட்டமுடையான், (காதிறான்) ஆதாரமன்றியே தத்துவமுடையான் (ஸமீஉன்) காதன்றியே கேள்வியுடையான் (பஸீறுன்) கண்ணன்றியே பார்வையுடையான் (முதக்கல்லிமுன்) நாவன்றியே பேச்சுடையான், ஆக ஸிபாத்துகள் இவ்விருபதுமாயிருக்கும்.

வாஜிபுக்கு மாற்றமாகிய முஸ்தஹீலத்தான ஸிபாத்துகள் இருபதுக்கும் விபரம்.

இந்த முஸ்தஹீலத்தான ஸிபாத்துகளவனுக்கு அறவேகிடையாது. அவையாவன:— (அதமுன்) இல்லாமை, (ஹுதூஸு) புதியது, (பனு) அழிவு, (முமாதலத்துன் லில்ஹவாதிஸி) புதிதான படைப்புகளுக்கு ஒப்பாகிறது. (அல்இஹ்திபாஜு இலாமுஹல்லின் அவ்முகஸ்ஸிஸின்) யாதொரு தானத்தளவில் அல்லது முகஸ்ஸிஸளவில் ஹாஜத்தாகிறது (அல்லத்தஅத்து) தாத்திலும், ஸிபாத்திலும் அப்ஆலிலும் எண்ணமுண்டாயிருக்கிறது

(அஜ்ஸான்) ஏலாமை. (இக்றூஹான்) நாடாமலிருக்கிறது. (ஜஹ்லுன்) அறியாமை, (மவ்த்துன்) சாவு, (ஸமமுன்) செவிடு (அமா) குருடு, (பக்கமுன்) ஊமை, (கவ்னுஹூ ஆஜிஸன்) ஏலாதவனாயிருக்கிறது. (மக்றாஹன்) நாடாதவனாயிருக்கிறது. (ஜாஹிலன்) அறியாதவனாயிருக்கிறது. (மைபித்தன்) மவ்த்தானவனாயிருக்கிறது. (அஸம்முன்) செவிடனாயிருக்கிறது. (அஃமா) குருடனாயிருக்கிறது. (அப்கமுன்) ஊமையனாயிருக்கிறது. ஆக இந்த இருபதிலொன்றையாவது அவனுக்கு உண்டெனச் சொன்னால் காபிறுவான் (நஊதுபில்லாஹி மின்ஹா.)

ஜாயிஸான ஸிபாத்துகள்.

முன்சொன்ன இருவகை ஸிபாத்துகளையுந் தவிர மற்ற ஸிபாத்துகளாவது, ஜாயிஸான ஸிபாத்தாயிருக்கும். இஃது அவனுக்கு உண்டாயிருக்குதலு மில்லாதிருக்குதலும் ஆமாயிருக்கும். அதாவது (பிஃலுகுல்லி மும்கினின் அவ்தர்க்குஹூ) இடம்பாடான தடங்கலையுஞ் செய்கிறது, அல்லது விடுகிறது. அவையாவது (கஸ்ஸவாபி லில்முதீஇ) வழிப்பட்டவனுக்கு ஸவாபு கொடுக்கிறது (வலயிகாபு லில் மிஆஸீ) மாறுசெய்தவனை வேதனை செய்கிறது. (வறுஃயத்தில் கல்கி லஹூ அஸ்ஸவஜல்ல பில்ஆகிறத்தி) ஆகிறத்திலவனை கல்குகள் காண்கிறது. (வல்இஸ்ஆதி) சீதேவியாக்கிறது. (வல்இஷ்காயி) மூதேவியாக்கிறது. (வல்இஃதாயி) கொடுக்கிறது. (வல்ஹிற்மானி) கொடுக்காமலிருக்கிறது இவைகளைப்போலாம். ஆனபோதே இவைகளிலொன்றையாவது அல்லாஹூத் தஆலா செய்வது அல்லது விடுவது அவனுக்கு வாஜிபாகாது. இன்னுமவனுக்கு மாதா, பிதா, மனைவி, மக்கள் சுற்றமில்லையென்றும், ஊண், உறக்கம், மறதி அழுகை, சிரிப்பு, நசல், சுவாத்தியம், பலநிறம், பலகுணம், நீளம் அகலம், கட்டை நெட்டை, ஆண், பெண் இவைபோலுள்ள மட்டுதிட்டங்கள் அடங்கலைவிட்டும் தூய்மையானவனென்றறிந்து ஈமான் கொள்கிறது.

ஜாயிஸான ஸிபத்துகளில் ஷாபியீ மத்ஹபுக்கும் ஹனபீ மத்ஹபுக்குமுள்ள கிலாபுகள்.

ஜாயிஸாகிய ஸிபத்தில் (அஷ் அரிய்யா) வெனும் ஷாபியிய்யா மத்ஹபையுடையவர்களுக்கும், (மாத்தூரிதிய்யா) வென்னும்

ஹனபி மத்ஹபையுடையவர்களுக்கும் கிலாபுண்டாயிருக்கிறது. அதன் விவரமாவது; ஹனபி மத்ஹபின்படி ஹயாத்து, இல்மு, இறாதத்து, குத்றத்து, ஷம்உ, பஸறுன், கலாமு இந்த மஆனிய்யான எழு ஸிபாத்து களுடன் தக்வீன் என்னும் ஸிபத்தையுஞ் சேர்த்து எட்டு ஸிபத்துகளும் வாஜிபாயிருக்கும். தக்வீனுகிறது இல்லாத வஸ்துவை யில்லாமையில் நின்றும் உண்டென்கிறத் தளவில் வெளிப்படுத்தி வைக்குத லெனும் உண்டாக்கிவைக்குதல், அழிக்குதல், படைக்குதல், சூறத்தாக்குதல், ஹயாத்தாக்குதல், மவ்தாக்குதல், இரணங்கொடுக்குதல், நேர்வழி காட்டுதல், வழி கேடாக்குதல் இதுபோலொத்த செயலோடுங்கூடிய ஸிபத்து களடங்கலும் தக்வீன் என்னும் ஸிபத்தளவில் மீளுகிறதாம். ஷாபியீ மத்ஹபின்படி செயலோடுங்கூடிய ஸிபத்துகளெல்லாம் குத்றத்தென்னும் ஸிபத்தளவில் மீளுகிறதாயிருக்கும். ஆனதால், தக்வீன் என்னும் ஸிபத்து வாஜிபில்லை. ஆனபோதே, செயல்களை வெளியாக்குதலும் வெளியாக்காதிருக்குதலும் இரண்டு மத்ஹபின் படிக்கும் ஜாயிஸாம். கிலாபாகிறதெல்லாம் தக்வீனெனும் ஒரு ஸிபத் துண்டென்றும், அதளவிற்றான் செயல்களெல்லாம் மீளு கிறதென்றும், தக்வீனெனும் ஸிபத்தில்லை யென்றும், குத்றத் தெனும் ஸிபத்தள விற்றான் செயல்களெல்லாம் மீளுகிறதென்றும் விபரிக்கிறதிலா யிருக்கும்.

ஈமானுடைய இரண்டாவது ஷறுத்து.

ஈமானுடைய இரண்டாவது ஷறுத்தாவது; மலாயிக்கத்து களைக் கொண்டு ஈமான்கொள்ளுகிறது. மலாயிக்கத்துகளடங்கலும் அல்லாஹுத் தஆலாவுடைய அடியார்கள், அவர்கள் ஒளிவினால் படைக்கப்பட்டவர்கள்; அல்லாஹுத் தஆலாவுடைய ஏவலுக்கு மாறு செய்யார்கள். அவன் ஏவப்பட்டதைச் செய்வார்கள். அவர்களுடைய சுபாவம் வழிபாடாயிருக்கும், அவர்கள் ஆணு மில்லைப் பெண்ணு மில்லை. பேடியுமில்லை இன்னுமவர்களுக்கு தீன் குடிப்பு, மாதா, பிதா, மனைவி, மக்கள், யாதொன்றுங் கிடையாது. அவர்களுக்குச் சிறகுகளுண்டு பற்பலகோலங்கண்டும் கோலங்கொ ள்ளுவதின் பேரிலும் திராணி பெற்றவர்கள் மிகுந்து அவர்களிருக் குந் தானமாகிறது வானமாகயிருக்கும், சிலர்பூமியிலு மிருப்பார்கள். அல்லாஹுத் தஆலாவைத் தொட்டும் விசளமறிவிக்குவதி லுண்மை

சொல்பவர்கள் அவர்களுடைய ஆலம், ஜின்னு, மனுமற்ற மாலமடங்கலைக் காணவும் நிரம்ப மிகுதமா யிருக்கும். அவர்களுடைய வலுப்பத்தையு மெண்ணிக்கையையும் அல்லாஹுத் தஆலா யொழிய யாருமறியார்கள். ஆகிலும், அவர்களில் நாம் எட்டுப்பேர்களை விவரமாயறிவது வாஜிபாம். ஒன்றாவது; நபிமார் களளவில் வஹி கொண்டு சாட்டப்பட்ட ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம். இரண்டாவது, மழைகள், கடல்கள் ஆறுகள், இரணங்கள் அளக்கிறது கொண்டும் கெர்ப்பங்களிலே பிள்ளைகளை சூறத்தாக்குகிறதுகொண்டும் சாட்டப்பட்ட மீக்காயீல் அலைஹிஸ்ஸலாம். மூன்றாவது; லவ்ஹுல்மஹ்பூலைக்கொண்டும் ஸூறாதுவது கொண்டும் சாட்டப்பட்ட இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாம். நாலாவது; கல்குகளுடைய றூஹுகளைக் கைப்பற்றுவது கொண்டு சாட்டப்பட்ட இஸ்றாயீல் அலைஹிஸ்ஸலாம். ஐந்தாவது; சுவர்க்கத்திற்கு அதிபதியாகிய றிலுவான் அலைஹிஸ்ஸலாம். ஆறாவது; நரகத்திற்கு அதிபதியாகிய மாலிக்கு அலைஹிஸ்ஸலாம். ஏழாவது எட்டாவது அடியார்களில் நின்று முண்டாகும் சொல் செயல் நிர்ணயங்களை ஹிப்லு செய்துகொள்ளு மென்னத்தக்க (றகீபு, அதீது) என்று ஒவ்வொருவ ரடங்கலுக்கும் பெயர் சொல்லப் பட்ட இரண்டு மலக்குகள், இன்னும் அறுஷை சுமந்தவர்கள் சூழ்ந்த வர்கள் மற்றும் மலாபிக்கத்துக ளடங்கலைக் கொண்டும் ஈமான் கொள்கிறது.

ஈமானுடைய மூன்றாவது ஷறுத்து.

ஈமானுடைய மூன்றாவது ஷறுத்தாவது வேதங்களைக் கொண்டு ஈமான்கொள்கிறது. வேதங்கள் ஸுஹ்புகளடங்கலும் அல்லாஹுத் தஆலாவில் நின்றும் அன்பியாக்கள் பேரில் இறக்கம் பட்டதாயும், அவனுடைய கலாமாயும், உண்மையானவைகளாயும், படையுனப்படாத தாயும் கதீமானதுகளாயும், ஒரே கலாமானவைகளாயு மிருக்கும். அந்த வேதங்கள் ஸுஹ்புகளடங்கலையும் நம்முடைய புறுகான் வேதத்தைக்கொண்டு மாற்றப்பட்டன. புறுகான் கியாமம்மளவும் பாக்கியாயிருக்கும்.

இனி அல்லாஹுத் தஆலா நூறு ஸுஹ்புகளையும் நாலு வேதங்களையு மிறக்கினான். அதில் ஆதம் அலைஹிஸ்ஸலா முக்கு பத்து ஸுஹுபுகளையும், ஷீது அலைஹிஸ்ஸலா முக்கு ஐம்பது

ஸுஹ்புகளையும் இத்ரீஸ் அலைஹிஸ்ஸலா முக்கு முப்பது ஸுஹ்பு களையும், இப்ருஹிம் அலைஹிஸ்ஸலா முக்கு பத்து ஸுஹ்பு களையும், இன்னும் தவ்ருத்து வேதத்தை அப்ருனிப் பாஷையில் மூஸா அலைஹிஸ்ஸலா முக்கும், ஸபூர்வேதத்தை யூனுனிப் பாஷையில் தாஊது அலைஹிஸ்ஸலா முக்கும், இன்ஜீல் வேதத்தை ஸுர்யானிப்பாஷையில் ஈசா அலைஹிஸ்ஸலா முக்கும், புர்கான் வேதத்தை அறபிப்பாஷையில் நம்முடைய நாயகம் முஹம்மது முஸ்தபா அஹ்மது முஜ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு மிறக்கினுனென்று ரிவாயத்து வருகிறது.

இன்னுமொரு ரிவாயத்தில் மூஸா அலைஹிஸ்ஸலாமுக்கு தவ்ருத்து வேதத்திற்கு முன் பத்து ஸஹ்புகளை இறக்கினுனென்றும் வந்திருக்கின்றது. இன்னும் ஸுஹுபுகளுடைய எண்ணிக்கையில் ரிவாயத்துகள் இருத்திலாபாக விருக்கிறது. ஆனதால் நான்குவேதத்தையுந் தவிர மற்றும் ஸுஹ்புகளுடைய எண்ணிக்கையைக் குறியாமல் மொத்தமாக வேதங்கள் ஸுஹ்புகளைக் கொண்டு ஈமான் கொள்ளவேணும்.

ஈமானுடைய நான்காவது ஷறுத்து.

ஈமானுடைய நான்காவது ஷறுத்தாவது றஸுல் மார்களைக் கொண்டு ஈமான்கொள்கிறது. றஸூல் மார்களடங்கலும் அல்லாஹுத் தஆலாவுடைய அடியார்கள் பாவங்களைவிட்டுங் காக்கப்பட்டவர்கள். இனியவர்களுக்கு வாஜிபாகிய ஸிபத்துகள் நாலுண்டு.

அதாவது (ஸித்கு) உண்மை, (அமானத்து) கார்மாணம் (தப்லீகு) ஏவப்பட்டதை எத்திவைக்குதல், (பதானத்து) அக்லு கூர்மை. ஆனபோதே, இதற்கு மாற்றமாகிய ஸிபாத்துகள் நாலுமவர்களுக்கு அறவேகிடையாது. முஸ்தஹீலான ஸிபாத்து அதாவது; (கிஸ்ப) பொய் (கியானத்து) விலக்கப்பட்ட கருமத்தைச் செய்கிறது (கித்மான்) ஏவப்பட்டதை மறைக்கிறது. (பிலாதத்து) அக்லு கூர்மை இழந்திருக்கிறது.

இனியவர்களுடைய மேலாம்பரமாகிய மறுத்தபாக்களைக் குறைத்தலாக்காத மனிதர் குணங்கள் அவர்களுடைய ஹக்கில் ஜாயிஸாயிருக்கும். அதாவது; (கல்அக்லி) ஊண், (வஷுர்பி

துடிப்பு (வல்பைஇ) விற்பனை (வஷ்ஷருஇ) கொள்வினை (வத்தஸவ்வுஜி) விவாகம் (வல்ஜிமாஇ) புணர்ச்சி (வல்மர்லில்கபீபி) இலேசாகிய நசல், இவைகளைப் போலாயிருக்கும்.

அறிந்துகொள்ளுங்கள்! றஸூல்மார்களளவிற் சொல்லப்பட்டதே அந்த ஒன்றடங்கலேயும் நபிமார்களுடைய ஹக்கிலும் சொல்லப்படும் தப்ஸீகையும் அதனுடைய மாற்றத்தையுந் தவிர இனி நபிமார்கள் லட்சத்திருபத்தி நாலாயிரமென்றும், இதில் முறுசலான நபிமார்கள் முன்னூற்றி பதின்மூன்றென்றும் முன்னூற்றி பதிநாலென்றும், முன்னூற்றி பதினைந்தென்றும் இக்திலா யுண்டாயிருப்பதால். அவர்களை எண்ணிக்கையில் மட்டிடாமல் மொத்தமாக நபிமார்கள் றசூல்மார்கள் அடங்கலைக் கொண்டும் ஈமான் கொள்கிறது.

ஈமானுடைய ஐந்தாவது ஷறுத்து.

ஈமானுடைய ஐந்தாவது ஷறுத்தாவது; ஒடுக்கத்து நாளைக் கொண்டு ஈமான் கொள்கிறது. ஒடுக்கத்து நாளென்று ஒரு நாளுண்டு, அதற்கு துவர்க்கம் ஹஷறுடைய வகத்து தொடுத்து ஒரு தீர்மானமில்லாத வரையிலாயிருக்கும். இன்னுமதினுடைய அடையாளங்கள் முகத்தமாக்களில் நின்றும் திக்றுச்செய்யப்பட்டடங்கலும் ஹக்கானதாயிருக்கும். அல்லாஹுத் தஆலா அந்த நாளில் கல்குகளை யெல்லா மெழிப்பி மஹ்ஷற் வழியிலே நிறுத்தாட்டிக் கேள்வி கணக்குகேட்டு முஃமினானவர்களைத் தன்னுடைய வரிசையைக்கொண்டு சொர்க்கம் புகுத்திவிப்பான். காபிர்களை அவனுடைய நீதங்கொண்டு நரகம் புகுத்திவிப்பான். பாவியாகிய முஃமினீன்களில் அவன் நாடிய பேர்களை அதாபில்லாமல் சுவர்க்கம் புகுத்திவிப்பான். அவன் நாடிய பேர்களை நரகம் புகுத்திவித்து அதாபுசெய்து பின்னாலே யவர்களையுஞ் சொர்க்கம் புகுத்திவிப்பான். காபிர்களை நரகத்தைவிட்டும் அப்புறத்தப்படுத்தப்படாமல் ஊழிபதியாய் அதிலேயே கிடப்பார்கள் என்று ஈமான் கொள்கிறது.

ஈமானுடைய ஆறுவது ஷறுத்து

ஈமானுடைய ஆறுவது ஷறுத்தாவது; கற்பனையைக்கொண்டு ஈமான் கொள்கிறது, கற்பனை ஆலத்திலுள்ளசொல், செயல்

நலவு, தீங்கு, ஈமான், குப்று, வழிப்பாடு, பாவம், தங்கடம், பிரயோஜனம் மற்றும் கருமங்களடங்கலும் அல்லாஹுத் தஆலாவுடைய கர்ப்பனை நாட்டங்கொண்டா யிருக்கும். அவனுடைய கற்பனையை விட்டும் நாட்டத்தைவிட்டும் யாதொன்றும் புறத்திப்படாது என்கிலும், அவனுடைய முஹப்பத்தும், பொருத்தமும், ஏவலும் நன்மையிலேயல்லாது தீமையிலே கிடையாது. அடியார்களுக்கு அவர்களுடைய செயல்களில் தெரியுதலை கொடுக்கப்பட்டிருப்பதால் நன்மை செய்தால் தவாபும் தீமை செய்தால் அதாபுங் கொடுக்கப்படும் என்று அறிந்து ஈமான் கொள்கிறது.

பாபுன் பீபயானில் இஸ்லாம்.

இஸ்லாமுடைய பயானிலே பேசும்பாடம். அல்லாஹுத் தஆலா குறுஆனில் திருவுளம் பற்றினன். (அல்யவ்ம அக்மல்த்து லக்கும் தீன்க்கும் வஅத்மம்த்து அலைக்கும் நிஃமத்தீவறலீத்து லக்குமுல் இஸ்லாமுதீனன்) (எஃனீ) "இஸ்லா மென்னும் மார்க்கத்தை உங்களுக்கு மார்க்கமாகப் பொருந்தி உங்கள் மீதில் என்னுடைய நிஃமத்தை தமாமாக்கி யுங்கள் தீனை இன்று நிறப்பமாக்கினேன்" என்று. (அல்இஸ்லாமு அல் இன்கியாது லிஅவாமிரில்லாஹித் தஆலா வல்இஜ்தினபு அன்னவாஹீஹி) (யஃனி) "இஸ்லாமாகிறது, அல்லஹுத் தஆலாவுடைய ஏவல்களுக்கு வழிப்பட்டு அவனின் விலக்கல்களை விட்டும் தவிழ்ந்து கொள்கிறதாயிருக்கும்."

(காலன்னபிய்யு ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) (எஃனி) நபி ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள்; (புனியல் இஸ்லாமு அலாகம்ஸின்) இஸ்லாமை ஐந்துகாரியத்தின்பேரி லெடுக்கப்பட்டது. முதலாவது (ஷஹாதத்து:—அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஅன்னமுஹம்மதுர் றசூலுல்லாஹி) உண்மையாக வணக்கத்திற்குப் பாத்திரவான் யாருமில்லை. அல்லாஹுத் தஆலாவைத் தவிர வென்றும்' உண்மையாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமாகிறவர்கள் அல்லாஹுத் தஆலாவுடைய திருத்தூதரா யிருக்குமென்று பிசகறவறிந்து விண்ணப்பஞ் செய்கிறது. இரண்டாவது (வஇகாமுஸ்ஸலாத்தி) தொழுகையை நிலைபாடாகக் கொண்டுவருகிறது மூன்றுவது (வயீதா வுஸ்ஸக்காத்தி) ஸக்காத்துக் கொடுக்கிறது. நாலாவது (வஸவ்முறமலான) றமலான்மாதம் நோன்பு பிடிக்

கிறது ஐந்தாவது (வஹஜ்ஜுல்பைத்தி மனிஸ்ததாஅ இலைஹி ஸபீலா) கஃபத்துல்லா விற்குப்போய் ஹஜ்ஜுசெய்யத் திராணி பெற்றவர்கள் ஹஜ்ஜுசெய்கிறது.

ஆனபோதே, இஸ்லாமுடையறுக்னுகள் ஐந்தாயிருக்கும். அதில் முந்தின றுக்னாகிய கலிமாஷஹாதத்துக்கு நாலு றுக்னுண்டு. அதாவது, அல்லாஹுத் தஆலாவுடைய தாத்தையும், ஸிபாத்தையும், அபுஆலையும், றசூலுடைய உண்மையையும் தரிபடுத்துகிறது. அவைகளில் முதலாவது:—

இதுபாத்து தாத்தில்லாஹித் தஆலா.

அல்லாஹுத் தஆலாவின் தாத்தை தரிபடுத்துகிறது. அதாவது, அல்லாஹுத் தஆலா வாகிறவன் (மவ்ஜுதுன்) உள்ளமையுடையவன் (கதீமுன்) பூர்வீகமானவன் (யஃனி) அவனுடைய உள்ளமைக்குந் துவக்கமில்லாதவன். (பாக்கின்) என்றென்றுந் தரிபாடானவன் (எஃனி) அவனுடைய உள்ளமைக்கு அழிவில்லாதவன் (முகாலபது லில்ஹவாதிஸி) புதிதான படைப்புகளடங்கலுக்கும் ஒவ்வா வண்ணமானவன் (எஃனி) தாத்திலும், ஸிபாத்திலும் அப்ஆலிலும், ஒப்புவமையில்லாதவன். (காயிமுன் பினப்ஸிஹி) தன்னைக்கொண்டு நிலைபாடானவன், (எஃனி) பிறரளவில் ஹாஜத்தாகாதவன். ஆனபோதே அல்லாஹுத் தஆலா திசையை விட்டுந் தலத்தைவிட்டுந் துய்யவன் வாஹிதுன் ஒருவனானவனென்று ஈமான் கொள்கிறது.

இரண்டாவது இதுபாத்து ஸிபாத்துல்லாஹித் தஆலா.

அல்லாஹுத் தஆலாவின் ஸிபாத்தைத் தரிபடுத்துகிறது. அதாவது:—அல்லாஹுத் தஆலாவாகிறவன் (ஹையுன் பிஹயாத்திஹி) தன் ஹயாத்துக்கொண்டு ஹயாத்துடையவன். (எஃனி) றூஹு கொண்டல்ல. (ஆலிமுன் பிஇல்மிஹி) தன் அறிவு கொண்டறிகிறவன் (எஃனி) கல்பில் தரிபாடாகிய கைபியத்துக் கொண்டல்ல. (முரீதுன் பிஇறாததிஹி) தன் நாட்டங்கொண்டு நாடுகிறவன், (எஃனி) கல்பு கொண்டல்ல. (காதிறுன் பிகுத்றத்

திஹி) தன் குற்றத்துக் கொண்டு திராணியுள்ளவன் (எஃனி) உருப்புகளைக் கொண்டும் பிறரைக்கொண்டு மல்ல. (ஸமீஉன் பிஸம்இஹி) தன் கேள்விகொண்டு கேட்கிறவன். (எஃனி) காதுகொண்டல்ல. (பஸீ றுன் பிபஸ்ரிஹி) தன் பார்வைக் கொண்டு பார்க்கிறவன் (எஃனீ) கண் கொண்டல்ல. (முத்தகல்லி முன் பிகலாமிஹி) தன் பேச்சைக்கொண்டு திருவசனமுடையவன் (எஃனி) நாவுகொண்டல்லவென்று ஈமான் கொள்கிறது.

மூன்றாவது இதுபாத்து
அப் ஆலில்லாஹித் தஆலா.

அல்லாஹுத் தஆலாவுடைய செயல்களைத் தரிபடுத்துகிறது அதாவது; அல்லாஹுத் தஆலாவாகிறவன், (முஜீதுன்) இல்லாமையில் நின்றும் வஸ்துக்களை உண்டென்கிறத்தளவில் வெளிப்படுத்துகிறவன். (முஃநிமுன்) உண்டாகிய வஸ்துக்களை இல்லாமையாக்கிறவன்.. (காலிகுன்) படைக்கிறவன், (றாஸிகுன்) இரணம் கொடுக்கிறவன். (முஹ்யின்) மவ்த்தானவர்களை ஹயாத்தாக்குகிறவன் (முமீத்துன்) ஹயாத்தானவர்களை மவ்த்தாக்குகிறவன். (ஹாதின்) நேர்வழி காட்டுகிறவன். (முஸல்லின்) வழிகெடுக்கிறவன். (முன்இமுன்) சுகண்டிபாக்கி வைக்கிறவன். (முஅத்திபுன்) வேதனை செய்கிறவன் மற்றுஞ் செயலோடுங்கூடிய சிபாத்துகளைக் கொண்டு ஈமான் கொள்கிறது.

நாலாவது இதுபாத்து ஸித்தி றசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.

றசூலுல்லாவுடைய உண்மையைத் தரிபடுத்துகிறது. அதாவது, உண்மைபாக கப்றுடைய அதாபு உண்டென்கிறது. முன்கர் நகீறுடைய கேள்வி உண்டென்கிறது. ஹஷ்று நஷ்று உண்டென்கிறது. நன்மை, தீமை நிறுக்கும் திராசு உண்டென்கிறது. ஸிறாத்துல் முஸ்தகீம் பாலம் உண்டென்கிறது. சுவர்க்கம் நரகம் படையுண்ணப்பட்டிருக்கிற தென்கிறது. இன்னுமவர் களறிவித்த விசளமடங்கலினு முண்மை சொன்னார்களென்று ஈமான் கொள்கிறது.

பாபுத்தஹாரு.

துப்புரவைப் பேசும்பாடம். காலன்னபிய்யு ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் (அத்துஹூறு ஷத்றுல் ஈமான்) (எஃனி) துப்புரவாகிறது ஈமானில் பாதியாயிருக்கும், என்று இன்னும் (மிப்தாஹுல் ஜன்னத்துஸ்ஸலாத்து வமிப்தாஹுஸ்ஸலாத்தித்துஹூறு) "(யஃனீ) சொற்கத்திற்குத் திறவுகோலாகிறது தொழுகையாயிருக்கும். தொழுகைக்கு திரவுகோலாகிறது துப்புரவாயிருக்கும்." என்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளம்பற்றினார்கள்.

இன்னும் இப்னு அப்பாஸின் றலியல்லாஹுஅன்ஹு (வயிதிப்தலா இப்றுஹீம றப்புஹு பிகலிமாத்தின்) என்னும் ஆயத்துடைய தப்ஸீரில் சொல்லுகிறதாவது; இப்றுஹிம் அலைஹிஸ்ஸலாமை அல்லாஹுத் தஆலா அவர்களின் தலைபிலே ஐந்துதுப்புரவைக்கொண்டு சோதித்தான். அவைகளாவன:—மேல் மீசை தரிக்கிறது. வாய் கொப்பளிக்கிறது, பல் தேய்க்கிறது, நாசிக்குத் தண்ணீர் செலுத்துகிறது, தலைமுடி இறக்கிறது, இவைகளாம். சரீரத்தில் ஐந்து விதமான துப்புரவைக்கொண்டு சோதித்தான். அவைகளாவன:—நக மெடுக்கிறது, கத்னச் செய்கிறது, கமுக்கட்டு ரோமமெடுக்கிறது, கீழ்ரோமமெடுக்கிறது, தண்ணீர்கொண்டு இஸ்திஞ்சாத் துப்புரவு செய்கிறது இவைகளாம். (கதாபீதன்பீஹுல் காபிலீன்) ஆக இந்த பத்துக் காரியங்களும் நமது மார்க்கத்தில் சுன்னத்தாக்கப்பட்டிருக்கிறது.

தண்ணீரின் ஹுக்முகள்.

அதாவது, உலூவும் ஜனுபத்து முழுக்கும், ஹைறு நிபாசு முழுக்கும், நஜீஸை நீக்குதலும் (மாவுன் முத்லகு) என்கிற மொத்தமாகிய தண்ணீர் கொண்டல்லால் கூடாது. அதற்கு துஹூறு என்றும் சொல்லப்படும் "ஐ! தானும் துப்புரவாய் பிறரையும் துப்புரவாக்கிறதென்று" சுன்னத்தான உலூவும் முழுக்கும் அது கொண்டல்லால் கூடாது. பறுலாகிய கழுவுதலில் பரிமாறிய முஸ்தஃமலென்ற தண்ணீரும், வாடை, சுவை, நிறம் பேதலித்த தண்ணீரும் நஜீஸ் விழுந்த கொஞ்ச தண்ணீரும் அது பேதகமல்லாதிருக்கினு மொக்கும், அல்லது நஜீசு விழுந்து பேதலித்த மிகுதித்

தண்ணீராயிருக்கிலுமொக்கும். அந்த பேதகம் கொஞ்சமாயிருக்கினுஞ்சரியே யாம், ஆக இவைகளெல்லாம் துடக்கையும் நஜீசையும் நீக்காது.

முத்லகாகிய தண்ணீராகிறது, மழை, கடல், ஆறு, கன்மாய், ஏரி, குளம், கிணறு, வாய்க்கால், கேணி, பணி, இவை போலொத்த தண்ணீராயிருக்கும் தரையல்லாத தழைகொண்டு பூஞரம் பூண்ட ஆனம், சாறு, இளநீர், பனீநீர் இப்படிக்கொற்றவைகளெல்லாம் மாஉன் முத்லகாகாது.

மிகுந்த தண்ணீரும் கொஞ்சத் தண்ணீரும்.

குல்லத்தைனுக்குப் போதுமான அளவுக்கு மிகுந்த தண்ணீரென்று சொல்லப்படும். அதாவது, நிறையால் பக்தாது றூத்தல் ஐந்நூறுயிருக்கும். அளவால் சதுரங்கமான தொட்டி அல்லது ஜாடிபோல் கொற்றதில் ஒன்றைய கால் முழம் அகலமும், நீலமும், ஆழமும் விருத்தமானதில் ஒரு முழ அகலமும் இரண்டரை முழம் ஆழமுள்ள வஸ்த்துவில் நிறம்பிய தண்ணீரா யிருக்கும். அதில் பறுலான கழுவுதலில் பரிமாறிய தண்ணீரும் நஜீஸும் நஜீஸானதும் விழுவதால் துஹூறெனும் பெயர் நீங்காது பேதலிப்புண்டானு லொழிய.

மேற்கண்ட அளவுக்கு இரண்டுருத்தலுக்கு மேல் குறைந்த தண்ணீரைக் கொஞ்சத் தண்ணீரென சொல்லப்படும். கொஞ்சத் தண்ணீர் சிறங்கிக் குதலுடைய நிய்யத்தில்லாமல் உலுவை அல்லது முழுக்கை நிய்யத்து வைத்து பறுலான உறுப்புகளிலொன்றை மூழ்த்தினுல் மூழ்த்தின உறுப்பைத் தவிர மற்றும் உறுப்புகளுக்கு அந்தத் தண்ணீர் முஸ்தஃமலாகிவிடும். மூழ்த்தின உறுப்பின் துடக்கு நீங்கி விடும். செம்புக்கிடாரம்போற் கொற்றத்தில் குல்லத்தைனுக்கு குறைந்தத் தண்ணீரில் துடைக்க நீக்கும் நிய்யத்தால் உறுப்படங்கலும் நனையும்படி ஓரே விடுத்தமாய் முங்கி எழும்பினுல் ஜனுபத்து நீங்கிவிடும்.

மக்றூஹான தண்ணீர்.

மக்றூஹான தண்ணீராகிறது, முழுக்குக்கும் உலுவுக்கும் மற்றும் பரிமாற்றத்துக்கும் பொருத்தக் கோடாயிருக்கும். வெள்ளி

பொன் பாத்திர மல்லாததில் அடிப்பு அல்லது வார்ப்புப் பாண்டத்திலிருந்து வெயிலில் காய்ந்ததும், நெருப்பினால் அதிகச் சூடான தண்ணீரும், அதிக குளுமையான தண்ணீரும், நெடுநாளாக ஊற்றல்லாத தலத்தில் கட்டுண்டு அருவருப்பான வஸ்துக்கள் கிடைக்கும் தண்ணீரும், மிகுதப்பேர் உலுசெய்த தண்ணீரும், காபிர்களுடைய கோயில் குளங்களின் தண்ணீரும் உலுசெய்வதற்கு மக்றாஹா யிருக்கும்.

பாபுன் பீபயானில் குஸ்லி.

முழுக்குடைய பயானைப் பேசும் பாடம் இப்னு உமர் றலியல்லாஹு அன்ஹுமாவைத் தொட்டும் பேசி வரப்பட்டிருக்கிறது, "இரண்டு பெயர்கள் சேர்ந்து கத்னாவரை மறைந்தால் மணி யிறங்கினும் இறங்கா விடினும் இரண்டு பெயர் மீதிலும் முழுக்கு விதியாய் விட்டதென்று றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமானார்கள்" என்று.

அல்லாஹுத் தஆலா குறுஆனில் திருவுளமானான், (வஇன் குன்த்தும் ஜுனுபன் பத்தஹ்ஹறா) எஃனீ) ஜுனுபா யிருந்தால் துப்புரவாக்கிக் கொள்ளுங்கள்" என்று அபூஹுறைறா றலியல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் றிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது:—"றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள், ஒவ்வொரு முடி யடங்கலுக்குந்தாழாலே ஜனபத்து யிருக்கிறது. ஆனதால், முடியடங்கலையும் கழுவுங்கள் மேனியை வெடிப்பாக்குங்கள் என்று.

முழுக்கை விதியாக்கும் கருமம் ஆறு.

இதில் ஆண், பெண் இருவருக்கும் பொதுவான கருமம் மூன்று, பெண்பிள்ளைகளுக்கு மாத்திரம் தனதான கருமம் மூன்று, பொதுவான கருமத்தில் முதலாவது, கத்னாவரை மட்டில் அபத்துள் மறைகிறது. அது பின்துவாரமா யிருக்கினும் ஹயாத்தானவர்கள் மவுத்தானவர்கள் மிருகம் பக்ஷி மீன் எந்த வஸ்துவின் அபமாயிருக்கினுஞ் சரி. இரண்டாவது மணி வெளிப்படுத்தல், அது ஒரு சொட்டாயிருக்கினும் இரத்தத்தின் நிறமாயிருக்கினுஞ் சரி. மூன்றாவது; மவுத்து திட்டமாகிறது, பீஸபீல் மவுத்தை தவிர.

பெண்பிள்ளைக்குத் தனதான காரியம் மூன்றில் ஒன்ருவது ஹைறுபற்றறுகிறது இரண்டாவது பிள்ளைபேறு துடக்கென்னும் நிபாஸு பற்றறுகிறது மூன்ருவது பிள்ளைப்பேறு தீருகிறது அது ஈரமில்லா திருக்கினுஞ் சரி.

முழுக்குக்கும் உலூவுக்கும் ஷறுத்துகள் ஏழு.

ஒன்ருவது பறுலிலும் நஜீஸிலும் பரிமாறப்படாத தண்ணீர். இரண்டாவது உறுப்புகளின் மீது தண்ணீரை யோட்டுகிறது மூன்ருவது உறுப்பில் தண்ணீரை செல்லவொட்டாத வஸ்தில்லா திருக்கிறது நாலாவது, உறுப்பில் தண்ணீரைப்பேதகமாக்கும் சந்தனம்போல் கொற்றவைகளில்லா திருக்கிறது. ஐந்தாவது தொங்கு நீர் பெரும்பாடு யிவ்வபோலொற்றவைகளால் உலூ முறித்தல் துடர்ச்சியா யிருப்பவர்கள் தொழுகைபின் வக்து வந்த பின் உலூசெய்கிறது. ஆருவது! தமீஸென்னும் வகை விபரம் எத்துகிறது ஏழாவது, இஸ்லாமாயிருக்கிறதுமாயிருக்கும்.

முழுக்குடைய பறுலுகள் இரண்டு

முதலாவது; முழுக்குடைய பறுலே இறக்கிறேன் என்று நிய்யத்து வைக்கிறது. இரண்டாவது அந்த நிய்யத்துடன் சீர மடங்கலையும் துப்புரவாக்கிற தண்ணீரால் நனைக்கிறதுமாயிருக்கும்.

முழுக்கின் சுன்னத்துகள் ஏழு.

முதலாவது பிஸ்மிசொல்லுகிறது; இரண்டாவது முன்கை கழுவுகிறது. மூன்ருவது, உலுச்செய்கிறது, நாலாவது துடர்ச்சி யாக குளிக்கிறது, ஐந்தாவது சீரத்தைத் தேய்க்கிறது, ஆருவது வலதுபுறம் முந்திக் கழுவுகிறது. ஏழாவது தலையின் பேரிலும் வலது தோள் இடதுதோளின் பேரிலும் சீர மடங்கலின் பேரிலும் மும்மூன்று விடுத்தம் தண்ணீரூற்றுகிறதுமாயிருக்கும்.

ஜுனுபாளிகளுக்கு ஐந்து காரியம்ஹறும்

முதலாவது தொழுகிறது. இரண்டாவது குறுஆனேது கிறது. மூன்ருவது குறுஆனைத் தொடுகிறது. நாலாவது பள்ளியில்

தரிக்கிறது. ஐந்தாவது கஃபாவைத் தவாபுச்செய்கிறதுமாயிருக்கும்.

ஹைலான மாதர்களுக்கு எட்டுக் காரியங்கள் ஹறாம்.

அதாவது:—மேல் சொன்ன ஐந்து காரியத்தோடு ஆறுவது முழுந்தாள் தொப்புழுக்கிடையில் கை இணக்கம் செய்வதும் ஏழாவது சேர்க்கை செய்வதும் எட்டாவது நோன்பு பிடிக்கிறதுமாயிருக்கும்.

பாபுன் பீ பயானில் உலூஇ.

உலூவுடைய பயானில் பேசும் பாடம். காலன் நபிய்யு ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் (அத்துஹூறு ஸத்றுல் ஈமான்) எஃனீ "துப்புரவாகிறது ஈமானில் பாதியாயிருக்கும்." என்றும். இன்னும் (மிப்தாஹுல் ஜன்னதிஸ்ஸலாத்து வமிப்த்தாஹுஸ் ஸலாத்தித் துஹூரி) (எஃனீ) சொர்க்கத்திற்குத் திறவுகோல் தொழுகையாயிருக்கும். தொழுகைக்குத் திறவுகோல் துப்புரவாயிருக்கும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளம் பற்றினர்கள்.

இன்னும் ஹதீதில் வந்திருக்கிறது "ஒருமனிதன் உலூச் செய்ய நாடி முகத்தைக் கழுவினுல் பார்வையால் செய்த பாவமடங்கலும். இரண்டு கையைக்கழுவினுல் கையால் தொட்ட பாவமடங்கலும், இரண்டுக்காலைக் கழுவினுல் காலால் நடந்த பாவமடங்கலும், உலூச்செய்த உறுப்புக்களிலிருந்து விழுகின்ற தண்ணீர் துளிகளிலிருந்தும் நீங்கிப் போய்விடும்" என்று சைபிதினு ஷபீஉல் முத்னிபீன் நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளம்பற்றியதாக (ஸஹீஹு முஸ்லிம்) என்கிற கித்தாபில் சொல்லப்பட்டிருக்கின்றது.

இனி உலூவின் ஷறுத்துகளை முழுக்குடைய ஷறுத்துகளுடன் கூறப்பட்டிருக்கின்றது.

உலூவின் பறுலுகள் ஆறு.

ஒன்றுவது நிய்யத்து. அதாவது, உலூவின் பறுலை இறக்கிறேன், என நிய்யத்துச் செய்கிறது. இரண்டாவது, அந்நிய்யத்

துடன் முகம்கழுவுகிறது. முகமாகிறது நீளத்தால் தலையில் முடி முளைக்குந் தலத்துக்கும் நாடிக்குழிக்கும், அகலத்தால் இரண்டு காதுக்கு மிடையிலுள்ள ரோமம் மேனியடங்கலையும் கழுவுகிறது. மூன்றுவது, இருகைகளையும் முழங்கை உள்படக் கழுவுகிறது, நான்காவது, தலையில் சிலதை மஸ்ஹு செய்கிறது. ஐந்தாவது, இரண்டு காலையும் பரண்டை வரையிலும் கழுவுகிறது. ஆறுவது முன்சொன்ன வொழுங்கின்படி முன்பின் வராமல் கொண்டுவருகிறது.

உலூவின் சுன்னத்துகள் பத்து.

முதலாவது பிஸ்மி சொல்லல். இரண்டாவது முன்கை கழுவல். மூன்றுவது வாய்க்குத் தண்ணீர் செலுத்தல். நான்காவது நாசிக்கு வாயுடன் தண்ணீர் செலுத்தல். ஐந்தாவது தலையில் நாலி லொரு பங்கை மஸ்ஹு செய்தல். ஆறுவது இருகாதுக்கும் மஸ்ஹு செய்தல். ஏழாவது தாடி கால் விரலிவைகளைக்குடைந்து கழுவல். எட்டாவது, வலது பாகம் முந்திக்கழுவல். ஒன்பதாவது, கிப்லாவை முன்னோக்கல். பத்தாவது உறுப்புகளை மூன்று விடுத்தம் கழுவுதலுமாயிருக்கும்.

உலூவின் மக்றூஹுகள் மூன்று.

ஒன்றுவது தண்ணீரை முகத்திலடிக்கிறது. இரண்டாவது தண்ணீரை அதிகக் கடப்பு செய்கிறது. மூன்றுவது சுன்னத்துக்கு விரோதம் செய்கிறதுமாயிருக்கும்.

உலூவை முறிக்கும் கருமங்கள் ஐந்து.

ஒன்றுவது முன்பின் துவாரத்தால் மணியைத் தவிர யாதொன்றும் புறப்படுதல். இரண்டாவது சமைந்த இருப்பன்றி யுறங்கல். மூன்றுவது அபத்திலே யகங்கை படல். நாலாவது தன்னை மறந்து போதக்கேடாகுதல். ஐந்தாவது, தனக்குக் கொள்ளத்தக்க மாதரைத் தொடுதலுமாயிருக்கும்

பாபுன் பீ பயானுத்தயம்மும்.

தயம்முமுடைய பயானிலே பேசும்பாடம். தயம்முமாகிறது சிறு தொடக்கு பெருந்துடக்கையுடையவன் வியாதியால் தண்ணீர்

பரிமாற இயலா தென்றிருந்தாலும், அல்லது ஸபரில் தண்ணீர் கிடையாதென்றிருந்தாலும், துப்புரவான புழுதியுள்ள மண்ணாற் தயமும் செய்து தொழுதுக்கொள்கிறது. பின்பு அதைகலா செய்ய வேண்டியதில்லை.

தயம்முமுடைய ஷறுத்துகள் பத்து.

ஒன்றுவது, மண்ணு யிருக்கவேண்டும். இரண்டாவது துப்புரவாயிருக்க வேண்டும். மூன்றுவது, பறுலில் பரிமாறப்படாததா யிருக்கவேண்டும். நான்காவது, அதில் மாப்போலொற்றவை கலக்கா திருக்கவேண்டும். ஐந்தாவது மண்ணை நாடவேண்டும்; ஆறுவது முகத்திற்கொருதடவையு கைக்கொருதடவையும் மெடுக்கவேண்டும் ஏழாவது துவர்கத்தில் தானே உறுப்புகளை நஜீஸைவிட்டும் நீக்க வேண்டும். எட்டாவது கிப்லாத்தடுமாறி இருக்கும் நேரம் தயம்முமுக்கு முன்னுகை கிப்லாவை தெண்டித்து இன்னதென நிச்சயித்துக் கொள்ளவேண்டும். ஒன்பதாவது வக்து ஹாலிருன பிறகு தயம்மும் செய்யவேண்டும். பத்தாவது எல்லா ஒவ்வொரு பறுலுஐனுடைய தொழுகைக்கும் ஒவ்வொரு விடுத்தம் தயமும் செய்வதுமாயிருக்கும்.

தயம்முமுடைய பறுலுகள் ஐந்து.

ஒன்றுவது, *புழுதியுள்ள துப்புரவான பறுலில் பரிமாறப்படாத மண்ணெடுத்தல். இரண்டாவது மண்ணை யெடுப்பதுடன் பர்லான் தொழுகையை ஆமாக்கிறேன்யென்று நிய்யத்துவைத்தல். மூன்றுவது முகத்தை மஸ்ஹு செய்தல், நான்காவது இரண்டு கையையும் மஸ்ஹு செய்தல், ஐந்தாவது மேல் சொன்னதுபோல் தறுத்தீபாயக்கொண்டு வருதலுமாயிருக்கும்.

தயம்முமுடைய சுன்னத்துகள் ஆறு

ஒன்றுவது, புழுதியை இலேசாக்கிறது. இரண்டாவது "நவைத்து இஸ்திபாஹத்துஸ்ஸலாத்து'' தொழுகையை அமாக்கத் தேடுதலை நிய்யத்துவைத்தேன் என்று வாயால் சொல்லுகிறது. மூன்றுவது; பிஸ்மில்லாஹி சொல்லுகிறது. நாலாவது கையில்

* இது ஷர்த்தென்றும் மற்ற நாலும் பர்லென்றும் சில கிதாபில் வருகிறது.

நின்றும் வலதை இடதைக்காண முற்படுத்துகிறது. ஐந்தாவது துடர்ச்சியாய்ச் செய்கிறது. ஆறாவது கைக்கு மஸ்ஹு செய்யும் போது இடதுகைப் பெருவிரலைத்தவிர மற்றதை வலதுகை விரல்களின் முதுகின்பேரில் வைத்து முழங்கை வரையிலும் நடத்தி மடக்கும் போது இடதுள்ளங்கையை வலது முழங்கையுள்ளில் நடத்தி மணிக்கட்டை யெத்தியவுடன் இடது பெருவிரலின் உள்ளே வலது பெருவிரலின் பேரில் நடத்துவான். இதுபோல் வலது கைவிரல்களைக் கொண்டு இடது கையுக்கும் மஸ்ஹு செய்வான்.

தயம்முமை முறிக்கும் கருமங்கள் மூன்று.

முதலாவது உலூவை முறிக்குங் கருமங்கள் இரண்டாவது தண்ணீரின் பேரில் திரானி பெறுகிறது. மூன்றாவது முறுதத்தாகிப் போகிறதுமா யிருக்கவேண்டும்.

பாபுன் பீ பயானின் னஜாஸத்தி.

நஜீஸுகளுடைய பயானிலே பேசும்பாடம். உலூ யில்லாம லிருப்பதும் முழுக்காளியா யிருப்பதும் ஹுக்மிய்யான நஜீசென்றும், மற்ற நஜீஸுகளை ஹகீகிய்யான நஜீஸென்றும் சொல்லப்படும். ஹுக்மிய்யான நஜீஸுகளின் பாடம் முந்திவிட்டது. ஹகீகிய்யான நஜீஸுகளின் ஹுக்முகளாவன. அதில் பொறுக்கப்படாத நஜீஸுகளும் பொறுக்கப்படும் நஜீஸுகளும் இருவகைப்படும் அதாவது :—

பொறுக்கப்படாத நஜீஸுகள்.

விட்டை, புழுக்கை, எச்சம், மலம், ஜலம், வஸீ, மஸீ, சத்தி இரத்தம், சீழ், ஊனம், இன்னும் மனிதன், மீன், விட்டை, இது மூன்றுந்தவிர மற்றும் செத்தஉடங்கலும் தின்னவாகாத ஹைவானி லுள்ள எலும்பு, தோல் கொம்பு, பல், சதை, ரோமம், கள்ளும், நாய், பன்றி, இவைரண்டா லொன்றுக்கு மற்றவொன்றில் அல்லது எந்த ஹைவானிலும் பிறந்த குட்டியும் பொறுக்கப்படாத நஜீஸாக விருக்கும்.

பொறுக்கப்பட்ட நஜீஸுகள்.

மூட்டை, செள்ளு, ஒலுங்கு, ஈசல், ஈ இவைகளுடைய இரத்தமும் தன்னுலுடைந்த சிலந்தி பூச்சிபோல் கொற்றதினுடைய இரத்த

மும் இதுகள் மிருக்கினு மொக்கும். நாய் பன்றி தவிர மற்றும் வஸ்து வின் இரத்தத்தில் கொஞ்சமும் ஹைறனுமொன்னிமுக்கு உடை தனுடைய இரத்தத்தில் கொஞ்சமும், ஈபின் பீச்சல்வவ்வானுடைய ரீர் புழுக்கை யிதுரண்டும் மிருததானுமொக்கும் பொறுக்கப்படும். உடையினும் சரீரத்தினும் தலத்தில் பொறுக்கப்படுவதுபோல் பொறுக்கப்படும்.

பாபுன் பீ அவ்காதுஸ்ஸலாத்தி.

தொழுகையுடைய வக்துகளிலே பேசும்பாடம்; வக்தையறியா மல் தொழுகிற தொழுகையும் வக்து வருமுன் தொழுகிற தொழு கையும் கூடாது, இது இரண்டும் வக்துக்குள் விசயமாயிருக்கினுஞ் சரி ஆகையால் வக்தையறிவது ஷறுத்தாயிருக்கும்.

ளுஹறுடைய வக்தாகிறது:—பொழுது மத்தியை விட்டும் ற சறுகின நேரமுதல் ஒருவஸ்துவின் நிழல் அது தன்னைப் போலாகி மட்டாயிருக்கும், சாப்பொழுதின் சாய்கையை நீக்கி.

அஸ்றுடைய வக்தாகிறது:—ளுஹறின் கடைசிக்குப்பின் சூரி யன் முழுதும் பாடுசாய்ந்து மறையும் வறையிலாயிருக்கும்.

மக்ரிபுடைய வக்தாகிறது:—சூரியன் முழுதும் மறைந்த நேர முதல் செம்மேகம் மறையும் வரையிலாயிருக்கும்.

இஷாவுடைய வக்தாகிறது:—செம்மேகம் மறைந்தது முதல் மெய் வெள்ளை வெளுக்கும் வறையிலாயிருக்கும்.

ஸுப்ஹுடையவக்தாகிறது,—மெய் வெள்ளை வெளுத்தது முதல் பொழுது உதையமாகும் வறையிலாயிருக்கும்.

மக்றூஹான் வக்துகள் ஐந்து.

ஒன்றுவது:—ஸுப்ஹுடைய பறுது தொழுதபின் சூரியனு திக்கும் வரையில்; இரண்டாவது, பொழுது உதித்து ஒருவல்லையப் பிரமாணமாகும் வரையில்; மூன்றுவது, பொழுது நடு உச்சியிலிருக் கும்போது; நாலாவது, அஸ்று தொழுதபின் சூரியன் அஸ்தமிக்கும் வரையில்; ஐந்தாவது சூரியன் மஞ்சளித்து அஸ்தமிக்கும் வரையி லாயிருக்கும்.

அவ்றத்தை மறைத்தல்.

ஆணும் பிறந்தவனும் வெள்ளாட்டியும் இருளிலிருந்தாலுஞ் சரி முழந்தாள் தொப்புளுக்கிடையி லுள்ளதையும் நாட்டாமகள் முகமும் இருகைமணிக்கட்டுவரையிலு முள்ளதைத் தவிர மற்றும் மேனி ரோம மடங்கலேயும் தோற்றி வியாது உடுமானத்தால் மறைப்பது தொழுகையிலும் தவாபிலும் குத்பாவோதுகிறதிலும் வாஜிபாகும். மற்றும் நேரங்களிலும் வாஜிபாகும். உடுமானமன்றியே தொழுகை கூடாது.

பாபுன் பீ பலீலத்தஸ்ஸல்லாத்தி.

தொழுகையுடைய வரிசையில் பேசும்பாடம். அல்லாஹுத்தஆலா குறுஆனில் திருவுளம் பற்றினான் :—இன்னஸ்ஸலாத்த கானத் அலல் முஃமினீன கித்தாபன் மவ்கூத்தா (எஃனீ) "திட்டமாக தொழுகையை இஸ்லாமாகிய ஜனங்கள் பேரில் ஐந்து வக்தையும் தொழும்படி வேத விதியாயிருக்கிறது" என்று.

ஹதீது.

கியாமநாளில் அல்லாஹுத்தஆலா கல்குகளை எழுப்பும்போது சில கூட்டத்தார்கள் நட்சத்திரம்போல் முகத்தையுடையவர்களாக எழுந்திருப்பார்கள் அப்போது மலக்குகள் நீங்களென்ன அமல் செய்தீர்கள்? உங்களுக்கு இவ்வளவு பெருமதி கிடைத்தது? என்று கேட்பார்கள். நாங்கள் பூமியில் இருக்கும்போது பாங்கு சப்தம் கேட்டவுடன் என்ன வென்ன வேலைகளிருந்த போதிலும் அவைகளையெல்லாம் விட்டு விட்டு உலூச்செய்து தொழுதோமென்று சொல்வார்கள்.

இன்னும் சில கூட்டத்தார்கள் சந்திரனைப்போல் முகத்தையுடையவர்களாக எழுந்திருப்பார்கள் மலக்குகள் நீங்களென்ன அமல் செய்தீர்கள் என்று கேட்பார்கள். நாங்கள் பாங்கு சப்தம் கேட்குமுன்பாக உலூச்செய்து தொழுவதற்காகத் தயாராயிருந்தோமென்று சொல்வார்கள்.

இன்னும் சில கூட்டத்தார்கள் சூரியனைப்போல் முகத்தையுடையவர்களாக எழுந்திருப்பார்கள். அப்போது, மலக்குகள் நீங்க

ளென்ன அமல் செய்தீர்கள்? என்று கேட்பார்கள். நாங்கள் பாங்கு சப்தத்தை பள்ளிக்குள்ளிருந்து கேட்டோமென்று சொல்வார்கள் என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

பாபுன் பீ உகூபத்தித் தாரிகிஸ்ஸலாத்.

தொழுகையை விட்டவனுடைய வேதனையில் பேசும்பாடம். குர்ஆன் ஷரீபில் அல்லாஹுத் தஆலா திருவுளம் பற்றினான். பவைலுன் லில்முஸல்லீ னல்லதீனஹும் அன்ஸலாத்திஹிம் ஸாஹூன்:-"வைல் என்னுமோடையாகிறது தொழுகையைவிட்டும் மறப்பார்களே அப்படிக்கொத்த தொழுகைக் காரருக்காயிருக்கு மென்று" (முருதாவது) வக்த்தைவிட்டும் பிற்படுத்துவார்களே அவர்களுக்காயிருக்கும் அறிந்துகொள்? வைல் என்னும் ஓடை யாகிறது ஜஹன்னம் என்னும் நரகத்தி லொரு ஓடை: அந்த ஓடையில் துன்யாவிலுள்ள மலைகளை யெல்லாம் கொண்டுபோடப் படுமானாலும் மலைகள் தண்ணீர்போ லுருகிப்போகும்.

ஹதீது.

உமறுப்னுல் கத்தாப் ரலியல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டது:—நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளம் பற்றினார்கள், "யாராகிலு மொருமனிதன் பாங்கு சப்தத்தைக் கேட்டவுடன் தொழுகைக்கு வரவில்லையாயின் அல்லாஹுத் தஆலா அவனை கைசேதப்பட்ட கூட்டத்தாருடன் எழுப்புவான். அவனை நரகத்தில் தள்ளி நரகவாதிகளுடைய ஊன், வெந்நீரை யவன் காதில் ஊற்றி அல்லாஹுத் தஆலாவுடைய தொழுகைக்காக பாங்கு சொன்னதைக் கேட்டவுடனே வாராம லிருந்தாயே அதற்காக விப்பேற்கொற்ற துன்பமான அதாபை பெற்றுக்கொள்? என்று மலக்குகள் சொல்லி அதாபு செய்வார்கள்" என்று றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானார்கள். தொழுகையாகிறது தீனுக்குத் தூணாயிருக்கும்; யாராகிலுமொருவன் தொழுகையை நிலை நிறுத்தாட்டினால் தீனை நிலை நிறுத்தினான்; தொழுகையை விட்டால் தீனை இடித்து விட்டான்; ஒரு அடியான் தொழுகையை விடுகிறதில்லை அல்லாஹுத் தஆலா

அவனுடைய முகத்தில் இவன் அல்லாவுடைய றஹ்மத்தை விட்டும் புறப்பட்டவனென்று எழுதியே யொழிய வென்றும் ஆகையால், அறிந்து கொள்ளுங்கள். யாராகிலு மொருவன் தொழுகையை விட்டால் நான் அவனை விட்டும் நீங்கினவனு யிருக்குமென்றுந் திருவுளமானார்கள்.

என்னுடர் பிறந்தான் மார்களே; இந்த ஹதீதையுங்களுடைய பயங்கரமென்னும் கண் கொண்டுபார்த்து உறுதிபெற்றுத் தொழுகையளவில் விரைந்து கொள்ளுங்கள்? அல்லாஹுதஆலா உங்களுக்கு இருபதியிலும் கிருபை றஹ்மத்துச் செய்வானுகவும்.

பாபுன் பீ ஷுறூதிஸ் ஸலாத்தி.

தொழுகையின் ஷறுத்துக்களை பேசும்பாடம். தொழுகையைத் தொடங்குமுன் வேண்டுமாகிய ஷறுத்துகள் பத்து. இந்தப்பத்து ஷறுத்துகளும் தொழுகை தீருமளவும் உண்டாகியே யிருக்க வேண்டும். ஒன்ருவது; இஸ்லாமாயிருக்குதல். இரண்டாவது; தமீஸெனும் வகை விவரமெத்துதல். மூன்ருவது; பெருத்துடக் கென்ற ஜனுபத்து ஹைறு நிபாசை விட்டும் சிறு துடக்கென்ற உலூமுறித்தலை விட்டும் துய்தாயிருக்குதல். நாலாவது; உடலும் உடையும் தளமும் பொறுக்கப்படாத நஜீசை விட்டும் துய்தா யிருக்குதல். ஐந்தாவது; நாட்டா மகனும் பயலும் வெள்ளாட்டியும் தொப்புள் தொடுத்து முழந்தாள் வரையும், நாட்டாமகள் முகமும் மணிக்கட்டு வரையில் இருமுன்கையும் தவிர மேனி யடங்கலும் ரோமம் கால் நகம் உள்ளங்கால் உள்படமறைத்தல். ஆருவது; கிப்லாவை முன்னேக்குதல். எழாவது; தன்மீது தொழுகை பறுலென்றறிதல். எட்டாவது; ஹாலிறத்தான தொழுகையின் வக்தறிதல். ஒன்பதாவது; பாங்கு பரிசறிதல். பத்தாவது; பறுலை சுன்னத்தை விட்டும் பிரித்தறிதல். இந்தப்பத்து ஷறுத்துகளில் ஒன்றை யாவது தவறவிடின் தொழுகை கூடாது.

தொழுகையின் பறுலுகள் பத்தொன்பது

ஒன்ருவது நிய்யத்துவைத்தல்; இரண்டாவது நிய்யத்துடன் அவ்வல் தக்பீறு சொல்லல். மூன்ருவது பறுலுத்தொழுகையில் நிலைநிற்கல்; நாலாவது பிஸ்மிலுடன்பாத்திஹாவோதல்; ஐந்தாவது

ருகூஃசெய்தல்; ஆருவது அதிற்றரிபடுதல்; ஏழாவது இஃதிதாலில் வருதல்; எட்டாவது அதிற்றரிபடுதல். ஒன்பதாவது முதல் சுஜூது செய்தல்; பத்தாவது அதற்றரிபடுதல்; பதிஞேராவது, இரண்டு சுஜூதுக்கிடையிலிருந்தல்; பனிரண்டாவது அதிற்தரிபடுதல்; பதிமூன்ருவது இரண்டாம் சுஜூது செய்தல். பதிநாலாவது. அதிற்றரிபடுதல்; பதினைந்தாவது பிந்தின அத்தஹிய்யாத்திருப்பிருத்தல். பதிஞருவது அதில் அத்தஹிய்யாத்தோதல். பதினேழாவது ஸலவாத்தோதல்; பதினெட்டாவது ஸலாம் சொல்லல். பத்தொன்பதாவது மேல் சொல்லியபடி தறுத்தீபாய்ச் செய்கிறது மேயாம்.

ஆனபோதே இந்த பறுலுகள் செயலாலுள்ள பறுலை அதன் தலமல்லாத்ததிர் செய்தாலும், சொல்லிஞலுள்ள பறுலில் ஸலாமையும் தொழுகையைத்தொடுகிற நிய்யத்துகொண்டு தக்பீறையும் முரண்டாக வருத்திஞலும், தொழுகை பாத்திலாம். இமாமானவன் அல்லது தனியே தொழுகிறவன் குறிப்பான ஒரு பறுலை விட்டதை மறந்து அல்லது ஷக்குமைத்து அதுபோற்கொற்றதை அடுத்தறக் அத்தில் எத்துமுதல் நினைவுவந்தவுடன் தீவிரமாய்விட்டதைக்கொண்டு வரவும், இல்லாவிடில் தொழுகை பாத்திலாம்.

நிய்யத்தில் ஷறுத்துகள் ஆறு.

ஒன்ருவது தொழுகை யென்னுஞ் செயலை நாடுகிறது. இரண்டாவது வக்தைக் குறிக்கிறது; மூன்ருவது பறுலுத் தொழுகையை பறுலெனக் குறிக்கிறது; நான்காவது அதாவை யதாவென்றும் கலாவை கலாவென்றும் குறிக்கிறது; ஐந்தாவது நிய்யத்தை கல்பில் விவரமாய்த் தரிபடுத்துகிறது, ஆருவது நிய்யத்தை முதல் தக்பீறுடன் சேர்க்கிறது.

தக்பீரின் ஷறுத்துகள் பத்து.

முதலாவது (அல்லாஹு அக்பர்) என்று சொல்லுகிறது; இரண்டாவது அறபுப்பாஷையாக விருக்கிறது; மூன்ருவது ஹறுபுகளைப் பேணுகிறது. நான்காவது அதன் ஷத்தைப்பேணுகிறது; ஐந்தாவது இரண்டு ஹம்ஸையும், ஹேறையையும், பேயையும் நீட்டாமலிருக்கிறது; ஆருவது (அக்பர்) உடைய றேய்க்கு சுகூன்

படச் சொல்லுகிறது. ஏழாவது அல்லாவை முந்தியும் அக்பரை பிந்தியும் சொல்லுகிறது; எட்டாவது அல்லாவையும் அக்பரையும் தொடர்ச்சியாகச் சொல்கிறது; ஒன்பதாவது, தன் காது கேட்கச் சொல்கிறது. பத்தாவது நிலையில்சொல்லி முடிக்கிறதுமேயாம்.

நிலையில் ஷறுத்து ஒன்று

அதாவது:— வலதுபக்க மிடதுபக்கஞ் சாயாமலும் முன் பின் குனியாமலும் நேராக நிற்பதாம்.

பாத்திஹாவில் ஷறுத்துகள் எட்டு

ஒன்றாவது ஹறபுகளைப் பேணுகிறது. இரண்டாவது அதன் ஷர்த்துகள் பதினாலையும் பேணுகிறது; மூன்றாவது அதன் இஃறாபுகளைப் பேணுகிறது. நான்காவது அதன் ஆயத்களை தறுத்தீபாயோதுகிறது; ஐந்தாவது அதைத் தொடர்ச்சியாக வோதுகிறது; ஆறாவது அறபுபாஷையாலோதுகிறது; ஏழாவது தனக்குக் கேட்கும்படி யோதுகிறது. எட்டாவது நிலையிலோதி முடிக்கிறதுமேயாம்.

றுகூஇல் ஷறுத்துகள் இரண்டு

ஒன்றாவது இரண்டு முன்கயையும் முட்டுக்காலைத் தொடுகிறவரையிற் குனிகிறது. இரண்டாவது றுகூஉ தன்னையே நாடிக்குனிகிறதுமாம்.

றுக்கூவின் தரிப்பில் ஷறுத்து ஒன்று

அதாவது:—உசும்புத லொடுங்குகிறவரையிற் றரிப்படுகிறது இதுபோற்றான் ஒவ்வொரு தரிப்படங்கலிலும் தரிப்படுகிறது.

இஃதிதாலில் ஷறுத்துகள் மூன்று.

முதலாவது, நட்டமாய் நிற்க்கிறது. இரண்டாவது இஃதிதால் தன்னையே நாடி நிமிருகிறது. மூன்றாவது அதில் ஷற்ஆக்கப்பட்டவிக்ருக்கதிகம் தாமிதம் செய்யாதிருக்கிறதுமேயாம்.

முந்தின ஸுஜூதில் ஷறுத்துகள் ஆறு.

முதலாவது நெற்றியைத் தரையில் பொறுக்கவைக்கிறது; இரண்டாவது இருமுட்டுக்காலில் சிலதும் இருவுள்ளங்கையில் சிலதும் இரு கால்விரல் உள்புறத்தில் சிலதும் வைக்கிறது; மூன்றுவது தன் சமுகத்தில் அகப்படாத வஸ்துவின் பேரில் நெற்றியை வைக்கிறது; நாலாவது நெற்றியைப் பொறுக்கவைக்கிறது; ஐந்தாவது தலை தனிந்தும் பின் தட்டு உயர்ந்துமிருக்கிறது; ஆறுவது ஸுஜூது தன்னையே நாடிக்குனிகிறது மாயிருக்கும்.

முந்தின ஸுஜூதின் தரிப்பில் ஷறுத்து ஒன்று.

அதாவது முந்தின உசும்புத லொடுங்குகிறதாயிருக்கும்.

நடுஇருப்பில் ஷறுத்துகள் மூன்று.

ஒன்றுவது நட்டமாயிருக்கிறது; இரண்டாவது அதில் ஷற்ஆக்கப்பட்ட ஸிக்றுக்கதிகம் ஆகாதிருக்கிறது; மூன்றுவது ஸுஜூதை விட்டு எழும்பும்போது இருப்பு தன்னையே நாடி எழும்புகிறது மாயிருக்கும்.

இரண்டாம் ஸுஜூதில் ஷறுத்துகள் ஆறு.

அதாவது:—முந்தின ஸுஜூதில் சொல்லிய ஷறுத்துகள் ஆறுமாயிருக்கும்.

இரண்டாவது ஸுஜூதின் தரிப்பில் ஷறுத்து ஒன்று.

அதாவது முந்தின தரிப்பில் கூறிய ஷறுத்து ஒன்றேயாம்.

அத்தஹிய்யாத் திருப்பில் ஷறுத்துகள் எட்டு.

ஒன்றுவது ஹறுபுகளைப் பேணுகிறது; இரண்டாவது ஷத்துகளைப் பேணுகிறது; மூன்றுவது இஃறுபுகளைப் பேணுகிறது; நாலாவது தறுத்தீபாய் ஓதுகிறது; ஐந்தாவது துடர்ச்சியாய் ஓதுகிறது; ஆறுவது அறபு பாஷையா யிருக்கிறது; ஏழாவது தனக்குக் கேட்கும்படி ஓதுகிறது; எட்டாவது இருப்பிலேயே முடிக்கிறதுமாயிருக்கும்.

ஸலவாத்தில் ஷறுத்துகள் எட்டு.

அதாவது அத்தஹிய்யாத்தில் சொல்லிய ஷறுத்துகள் எட்டுமாம்.

ஸலாமில் ஷறுத்துகள் ஐந்து.

ஒன்றாவது ஹறுபுகளைப் பேணுகிறது; இரண்டாவது அதன் ஷத்துகளைப் பேணுகிறது; மூன்றாவது தொடர் பிடியாய்ச்சொல்கிறது; நாலாவது தனக்குக் கேட்கும்படியாய் ஓதுகிறது; ஐந்தாவது இருப்பிலேயே முடிக்கிறதுமாயிருக்கும்.

தறுத்தீபில் ஷறுத்து ஒன்று.

அதாவது முன் சொல்லப்பட்ட பறுலுகள் யாவையும் முன் பின் ஆக்காமல் அதன் முறைப்படியே கொண்டு வருகிறதேயாம்.

தொழுகையின் அப்ஆலு சுன்னத்துகள் பன்னிரண்டு.

ஒன்றாவது முந்தின அத்தஹிய்யாத் ஓதுகிறது. இரண்டாவது அதற்காக இருக்கிறது. மூன்றாவது அதில் நபியுல்லாபேரில் சலவாத் ஓதுகிறது. நாலாவது அதற்காக இருக்கிறது; ஐந்தாவது பிந்தின அத்தஹிய்யாத்தில் சலவாத்துடன் ஆல்களைச் சேர்க்கிறது. ஆறாவது அதற்காக இருக்கிறது. ஏழாவது ஸுப்ஹூத் தொழுகையிலும் றமலான் பிந்தின பாதியின் வித்றுத்தொழுகையிலும் குனூத் ஓதுகிறது; எட்டாவது அதற்காக நிற்கிறது; ஒன்பதாவது அதில் நபியுல்லாபேரில் சலவாத் ஓதுகிறது; பத்தாவது அதற்காக நிற்கிறது. பதினோராவது அந்த சலவாத்துடன் ஆல்களைச் சேர்க்கிறது; பனிரண்டாவது அதற்காக நிற்கிறதுமாயிருக்கும்.

தொழுகையின் அலங்கார சுன்னத்துகள் பதினெட்டு.

தொழுகையில் அலங்கார சுன்னத்துகள் அநேகமுண்டு அவைகளில் சுருக்கமாகப் பதினெட்டை மாத்திரம் கூறுகிறோம்.

அதாவது முதல் தக்பீறிலும் றுகூஇல் குனிகிறதிலும், அதை விட்டு நிமிருவதிலும் முந்தின அத்தஹிய்யாத்தை விட்டு எழும்புவதிலும், இருகையையும் தோள்வரை உயர்த்துகிறது. இரண்டாவது இடதுகையின்பேரில் வலதுகையை வைத்து தொப்புளுக்கு மேல் நெஞ்சுக்குக்கீழ் கட்டுகிறது. மூன்றுவது, ஜனாஸாத் தொழுகையில்லாத மற்றத் தொழுகைகளில் முந்தின றக்அத்தில் முதலாவது (வஜ்ஜஹ்த்து) ஸிர்றாக ஓதுகிறது; நாலாவது எல்லா றக்அத்திலும் பாத்திஹாவுக்கு முன் அஊது ஸிர்றாக ஓதுகிறது; ஐந்தாவது கிறுஅத்தை அமர்ந்து ஓதுமிடத்தி லமர்ந்தும் இரைந் ஓதுமிடத்திலிரைந்து ஓதுகிறது; ஆறுவது பாத்திஹாவக்குப் பின் ஆமீன் சொல்லுகிறது; ஏழாவது முந்தின இரண்டு றக்அத்திலும் பாத்திஹாவுக்குப்பின் சூறா ஓதுகிறது; எட்டாவது றுக்கூவுஸுஜூதுக்கு குனியும்போதும், ஸுஜூதை விட்டு நிமிரும்போதும் தக்பீரு சொல்கிறது; ஒன்பதாவது றுகூஐ விட்டு நிமிரும்போது அதன் தஸ்மீஐ ஓதுகிறது; பத்தாவது றுக்கூஇல் அதன் தஸ்பீஹை மூன்று தர மோதுகிறது; பதினோராவது இரு ஸுஜூதிலும் அதன் தஸ்பீஹை மூன்று தர மோதுகிறது. பன்னிரண்டாவது நடுயிருப்பில் வலதுகை விரல்களை மடக்கியும் கலிமாவிரலை நீட்டியும், இடதுகை விரல்களை விரித்தும் இருதுடையின் பேரில் வைக்கிறது. பதிமூன்றுவது "இல்லல்லா" வென்னும் சொல்வரும்போது கலிமாவிரலை உயர்த்துகிறது. பதினாலாவது அத்தஹிய்யாத்தோடு (அல்முபாறக்காத்துஸ்ஸலவாத்துத்தையிபாத்து) என்னும் சொற்கள் மூன்றையும் சேர்த்துத் தொடராகச் சொல்கிறது. பதினைந்தாவது நடுஅத்தஹிய்யாத்திலும் இரண்டு ஸுஜூதுக்கு மிடையிருப்பிலும். வலதுகால் படத்தை யூன்றி இடது காலின் பேரிலிருக்கிறது. பதினாறுவது கடைசியிருப்பில் இடதுகாலை வலது பக்கத்தை விட்டும் புறத்திப் படுத்திசவனத்தின் பேரிலிருக்கிறது; பதினேழாவது சிறப்பமான அத்தஹிய்யாத்து ஸலவாத்து துஆ முதலானவைகளை ஓதுகிறது. பதினெட்டாவது இரண்டாம் ஸலாம் சொல்கிறதுமாயிருக்கும்.

தொழுகையில் மக்றூஹுகள் பத்து.

ஒன்றுவது ஸுஜூதிடும் தலமல்லாத்ததை பார்க்கிறது. இரண்டாவது தலையை மிகுதி தாழ்த்துகிறது; மூன்றுவது கண்ணை மூடக்

கொள்கிறது; நாலாவது இருளில் தொழுகிறது; ஐந்தாவது ஒரு கால் பொறுப்பாய் நிற்கிறது. ஆறவது ஒருகால் முந்தியு மொரு கால் பிந்தியும், இருகாலு மொன்றுகச் சேர்த்தும் நிற்கிறது. ஏழாவது முகத்தை மூடிக்கொள்கிறது; எட்டாவது மலம் ஜலம் காற்றை யடக்கிக் கொள்கிறது; ஒன்பதாவது பசியோடு தொழுகிறது; பத்தாவது கபருஸ்தான் களிலும் கக்கிசுகளிலும் கோவில்களிலும் தொழுகிறதுமாயிருக்கும்.

தொழுகையை முறிக்கும் கருமங்கள் பதிமூன்று

ஒன்றுவது விட்டடலாமாவென நாடுதல் இருமனதாகுதல்; இரண்டாவது துபர்பிடியாய் மூன்று செயல் செய்தல்; மூன்றுவது குறுஆன் வசிர்று துஆவல்லாத இரண்டு ஹறுபை அல்லது மஃனு விலங்கும்படியான ஒரு ஹறுபை மொழியுதல்; நாலாவது கிப்லாவை நெஞ்சுகொண்டு மாறுதல்; ஐந்தாவது நோன்பை முறிக்கும் படியான வஸ்துவுள்ளில் செலுத்துதல்; ஆறுவது செயலாலுள்ள பறுலுகளை ஞாபகமாய் அதிகப்படுத்துதல்; ஏழாவது தொழுகையின் பறுலுகளிலொன்றை சுன்னத்தென்றறிதல்; எட்டாவது பெருந்துடக்கும் சிறு துடக்குண்டாதல்; ஒன்பதாவது ரித்தத்தை வருத்துங் கருமமுண்டாதல்; பத்தாவது கெக்கை போட்டுச் சிரித்தல்; பதினோராவது தொழுகிற தலம் உடை சரீரம் முதலானதில் பொறுக்கப்படாத நஜீஸுண்டாதல்; பனிரண்டாவது அவ்றத்து வெளியாகுதல்; பதிமூன்றுவது ஒருபறுலை யல்லது ஒருஷறுத்தை ஞாபகமாய் விடுதலுமாயிருக்கும்.

ஐந்து விதத்தினுல் ஸஜதாஸஹ்வு சுன்னத்தாகும்.

ஒன்றுவது மேற்சொன்ன அப்ஆலு சுன்னத்துகளில் சிலதை மறதியாக அல்லது ஞாபகமாக விடுகிறது. இரண்டாவது அந்த சுன்னத்தை விட்டதை சக்குவைக்கிறது; மூன்றுவது முதல் தக்பீறும் ஸலாமும் தவிர மற்ற சொல்லாலுள்ளதை யதன் தலமல்லாத்ததில் செய்கிறது; நாலாவது ஞாபகமாய்ச் செய்தால் தொழுகை பாத்திலாகுமே யப்போர் கொற்றதை மறதியாகச் செய்கிறது; ஐந்தாவது தான் தொழுத றக்அத்தின் எண்ணிக்கையில் ஷக்கு வைக்கிறது மாயிருக்கும்.

ஸஜதாஸஹ்வின் விதமாவது.

அந்தத் தொழுகையி னுடுக்கத்தி லிரண்டு ஸுஜூது செய்து ஸலாம் வாங்கவும். அந்த ஸுஜூது இரண்டும் சுன்னத்தாயிருக்கும். அந்த அப்ஆலு சுன்னத்தில்லாமல் வேறே எந்த சுன்னத்தாவது விட்டதற்கு ஸஜதாஸஹ்வு கிடையாது. அதையறிந்து முரண்டாக ஸஜ்தா ஸஹ்வு செய்தால் தொழுகை பாத்திலாம். ஸஜ்தாஸஹ்வை மறந்து ஸலாம் வாங்கினவன் கிப்லாவை நெஞ்சு கொண்டு மாறாதிருந்தால் தொழுகை யளவில் மீண்டு ஸஜ்தாஸஹ்வுசெய்து ஸலாம் வாங்கலாம்.

பாபுன் பீ கைபியாத் திஸ்ஸலாத்.

தொழுகையுட ஒழுங்கின்பாடம். தொழுகிறவர்களிந்த ஒழுங்கின்படியே தொழுதல் வேண்டும். அதாவது:—

சரீரத்தையும் புடவையும் நஜீஸுகளைவிட்டும் சிறுதுடக்கு பெருந்துடக்கைவிட்டும் துப்புரவாகியபின் உறுப்புகளை ஹறாமான பார்வை கேள்வி கோள் புறம் பொய் இவைபோலொத்த பாவங்களை விட்டுந்துப்புரவாக்கி, கல்பை வஞ்சகம், மோசம், பொறாமை, சூது, வினை யிவை போலொத்தவைகளை விட்டுந் துப்புரவாக்கித் தன்னுடைய பாவங்களை விட்டுந் தௌபா செய்து கல்பை துனியாவுடைய பராக்களவில் நாடவொட்டாம லியன்றமட்டிலுந்தட்டி அல்லாஹுத் தஆலாவுக்காக இபாதத்தைக் கலப்பறுதலாக்கி நிய்யத்துச் செய்து கிபுலாவுக்கு நேராகநின்று இரண்டு பாதத்திற்கு மிடையில் நாலுவிரல் மட்டுக்கிடைவிட்டு இரண்டு முன்கைகளையும் சட்டைக் கையை விட்டும் கொஞ்ச நீக்கியுயர்த்தி விரல்களினருகுகள் காதின்மேற்புறத்துக்கு நேராக்குவதில் இருபெரும்விரலைசோணைக்கு நேராகவும், இரண்டுள்ளங்கைபையும் புயத்துக்கு நேராயும் கிபுலா பாகமா யுயர்த்தி தக்பீரை துவக்கி "அல்லாஹு அக்பர்" என்று முடித்துவிட்டு வலது கையைகொண்டு இடதுகை மணிக்கட்டின் முதுகை பிடிப்பதுடன் இருகைபையும் தொப்புளுக்கு மேலே நெஞ்சுக்கு கீழாகவைத்து துஆவுல் இஃப்திதாஹு ஓதவும். அதாவது:- வஜ்ஜஹ்த்து வஜ்ஹிய லில்லதீ பதரஸ் ஸமாவாத்தி வல்அர்ள ஹனீபன் வமாஅன மினல் முஷ்ரிகீன். இன்ன ஸலாத்தி வநுஸுகி வமஹ்யாய வமமாத்தி லில்லாஹி றப்பில் ஆலமீன் லாஷரீக்கலஹு வபிதாலிக

உமிர்த்துவஅன மினல்முஸ்லிமீன்; என்று ஓதிய பின்னர் அவூது சொல்லி பிஸ்மில்லாவுடன் ஸூறத்துப் பாத்திஹாவை யோதி முடித்துக் கொஞ்சம் வாய்மூடி அப்பால் றப்பிக்பிர்லீ ஆமீன் என்று சொல்லிப் பிறகு ஒரு பெரிய ஆயத்து, அல்லது சிரிய மூன்று ஆயத்து, அல்லது ஒரு ஸூறுவையோதவும். இமாமுக்குப் பின்னால் தொழுகிற மஃமூமாகவிருந்தால் பாத்திஹாவை முடித்து விட்டு இமாமுடைய ஓதலைக் கேட்டுக்கொண்டு நிற்கவும் இமாமுடைய ஓதல் கேளாதிருந்தால் தக்பீறு, அல்லது தஹ்மீது, அல்லது தஸ்பீஹு இவைகளையோதிக் கொண்டு நிற்கவும். அப்பாலந்த நிலையில் நின்று றுக்கூவுக்கு இருக்கையையு முயர்த்தித் தக்பீறு சொல்லிக்கொண்டு குனிந்து இருகையையுடைய விரல்களைப் பொற்றுமலும் மிகுதி விரிக்காமலும் முளந்தாள் மேற்பொறுக்க வைத்துக்கொண்டு இடுப்புக்குச் சரியாகத் தலையைவைத்து றுக்கூஇல் தரித்துக்கொண்டு "ஸுபுஹான றப்பியல்அலீம் வபிஹம் திஹி" யென்று மூன்று விடுத்தமோதிவிட்டு றுக்கூஐ விட்டும் இக்தி தாலுக் கெழும்பும்போது "ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதா" வென்றோதி நிலையில் வந்து தரித்து நின்றுக்கொண்டு "றப்பனாலக்கல்ஹம்து மில்அஸ் ஸமாவாத்தி வமில் அல்அறுலி வமில்ஆ மாஷிஃத்தமின் ஷைபின் பஃது" என்றோதிவிட்டு இரு கையையு முயர்த்தி தக்பீறு சொல்லிக்கொண்டு ஸுஜூதுக்குப் போய் இருகையையும், காலையும், விரல்களையும் கிபுலாவுக்கு நேராக மிகுதி பொற்றுமலும், விரிக்காமலும் இருதோளுக்கும் நேராக இருகையையுந்தரையில் வைத்து மூக்கைத்தறையிற் பொறுப்பாக வைத்துக்கொண்டு "ஸுபுஹான றப்பியல் அஃலா வபிஹம்திஹி" யென்று மூன்றுவிடுத்த மோதவும்.

ஆனால் றுக்கூயிலும் ஸுஜூதிலும் ஆண்பிள்ளை யானவன் இருகையை விலாவை விட்டும் நீக்கி யிடைபோட்டுக் கொள்ளவும். பெண்பிள்ளை யானவள் இடைபோடாமல் இருக்கையையும் விலாவுடன் நெருக்கிக்கொள்ளவும். அப்பால் ஸுஜூதைவிட்டு மெழும்பும்போது தக்பீறு சொல்லிக்கொண்டு நடு இருப்பளவில் வருகையில் இடதுகாலை மடக்கி விரித்து வலதுகாலை விரல்களின் பொறுப்பாய் நாட்டியிருப்பதில் கையின் விரல்களை கிபுலாவுக்கு நேராக இருதுடையின்மேல் வைத்துக்கொண்டு "றப்பிக்பிர்லீ வர்ஹம்னீ வஜ்புர்னீ வர்பஃனீ வர்ஸுக்னீ வஹ்தினீ வஆபினீ வஃபுஅன்னீ"

என்றோதி தக்பீறு சொல்லிக்கொண்டு இரண்டாவது ஸுஜூதுக் குப்போய் முன்போலவே சொல்லி முடித்து விட்டெழும்பி இஸ்தி ருஹத்து இருப்பிருந்து ஒழுங்காகக் கையை யூன்றிக்கொண் டெழும்பி யிரண்டாவது றக்அத்துக்காகத் தக்பீறு சொல்லி நிலை யில் வந்து அஊது ஓதி பிஸ்மில்லாவுடன் ஸூறத்து பாத்திஹாவு மோதி யிரண்டாம் றக்அத்தை முடித்து இரண்டாம் ஸுஜூதுக் குப் பிறகு அத்தஹியாத்துக்கு வரும்போது நடு விருப்பைப் போலும் ஸலாம் வாங்கும்படியான கடைசி அத்தஹிய்யாத் திருப் பாயிருந்தால் வலதுகாலை நட்டி யிடதுகாலை யதன்கிழாலே வெளி படுத்தி யுற்றவிருப்பாக விருப்பத்தோடு இடது கைவிரல்களைக் கிபுலாவுக்கு நேராகும்படி யிடதுமுட்டின்மேல் வைத்து வலதுகை யின் கலிமாவிரலைத் தவிர மற்ற விரல்களைப் பொற்றுவதில் கலிமா விரலின் தலையைக் கொஞ்சஞ் சாய்த்து நீட்டி அதனருகிற் பெரும் விரலைவைத்து அத்தஹியாத் தோதவும். அதில் "இல்லல்லா" வென்னு கலிமா வரும்போது அந்தக் கலிமாவிரலையுயர்த்தவும். அதில் முந்தின அத்தஹிய்யாத்துக்கு "அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின்" என்கிற வரையிலோதவும். பிந்தின அத் தஹிய்யாத்துக்கு அதனோடு கடைசிவரையிலு மோதிமுடிக்கவும். பின்பு தன் வலது கன்னத்தை பின்னாலிருப்பவர்கள் கண்டுக்கொள் வார்களென்ற மட்டிலும் வலதுபுறம் திரும்பி "அஸ்ஸலாமு அலைக் கும் வறஹ்மதுல்லாஹி வபறகாத்துஹு" என்று வலது ஸலாம் கொடுத்தவுடன் (அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்கல் ஜன் னத்த) என்று சொல்லிக்கொண்டு இடதுபுறம் திரும்பி இரண் டாவது ஸலாம் கொடுக்கவும்.

பிறகு (அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக்க மினன்னார்) என்று ஓதவும். பின்னால் இஸ்திக்பார் துஆக்களை யோதிமுடிக்கவும். ஆனால் இரண்டு றக்அத்துக்கு அதிகப்பட்ட தொழுகையாக விருந்தால் இரண்டாவது மூன்றாவது றக்அத்துக்கு பாத்திஹாவுக்குப் பின் ஸூறு ஓதவேண்டியது அவசியமில்லை. ஸுப்ஹுத் தொழுகையா இருந்தால் இரண்டாம் றக்அத்துடைய இஃதிதாலிலும், றமலா னுடைய பிந்தின பதினைந்துக்குப் பின்னால் கடைசிநாள் வரை தொழுகிற வித்றுத்தொழுகை யாயிருந்தால் கடைசி றக்அத்தின் இஃதிதாலிலும் இருபுயத்துக்கும் நேராலே இருகையையு மலத்தி யேர்தி குனூது ஓதிவிட்டு ஸுஜூதுக்குப் போய்த் தொழுகையை

முடிக்கவும். இமாம் ஜமாஅத்துடன் தொழுகிறதாயிருந்தால் இமாம் குனூத் தோதும்போது மஃமூம் ஆமீன் கூறவும். அதில் (பஇன்னக்கதக்லீ) தொடுத்து கடைசி வரை இமாமுடன் தானும் ஸிர்ராக ஓதிப் பின் ஸலவாத்தோதும்போது ஆமீன் கூறவும்.

பாபு பீ ஸலாத்திந்னப்ளி.

ஸுன்னத்தான தொழுகையில் பேசும் பாடம். ருத்நிபத்து ஸுன்னத்தாவது ளுஹறுக்கு முன்னாலே நாலு றக்அத்து, பின்னாலே நாலு றக்அத்து, அஸறுக்கு முன்னாலே நாலு றக்அத்து, மக்ரிபுக்கு முன்னாலே இரண்டு றக்அத்து, பின்னாலே இரண்டு றக்அத்து, இஷாவுக்கு முன்னாலே இரண்டு றக்அத்து, பின்னாலே இரண்டு றக்அத்து ஸுப்ஹுக்கு முன்னாலே இரண்டு றக்அத்து ஆக இந்த இருபத்திரண்டு றக்அத்தும் பறுலுடன் சேர்ந்த ஸுன்னத்தென்பதில் ளுஹறுக்கு முன் இரண்டு றக்அத்தும், பின் இரண்டு றக்அத்தும் மக்ரிபுக்குப் பின் இரண்டு றக்அத்தும் இஷாவுக்குப் பின் இரண்டு றக்அத்தும் ஸுப்ஹுக்கு முன் இரண்டு றக்அத்தும் ஆக இந்த பத்து றக்அத்தும் பலவந்தமான ஸுன்னத்து முஅக்கதாவாயிருக்கும்.

(பறுலுமுன்னும் பின்னும் உண்டாயிருக்கிற ஸுன்னத்தில் முந்தினதில் (கப்லிய்யா) வென்றும் பிந்தினதில் (பஃதிய்யா) வென்றும் நிய்யத்தில் குறிப்பாக்கிக் கொள்ளவும்.

பாபுன் பீ பலீலத்தில் ஜமாஅத்தி

ஜமாஅத்துடன் தொழுகிற வரிசையில் பேசும் பாடம்.

ஹதீது.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானார்கள். ஒரு மனிதன் தன் வீட்டில் தனியே தொழுகிறதைக் காணப்பள்ளியில் போய் ஜமாஅத்துடனே தொழுதால் இருபத்தைந்து தறஜா ஏற்றமென்றும், மறுரிவாயத்தில் இருபத்தேழு தறஜா ஏற்றமென்றும் ஒரு மனிதன் நாற்பது நாளைக்கு ஜமாஅத்துடன் முந்தின தக்பீறில் சேர்ந்து தொழுதால் அவன் நரகத்தை விட்டும்

முனபிருக் தனத்தை விட்டும் நீங்கிவிட்டானென்று இரண்டு உரிமைச்சீட்டுகள் எழுதப்படுமென்றும், அல்லாஹுத் தஆலாவும் அவனுடைய மலக்குகளும் ஸப்புகளின்பேரில் சலவாத்துச் சொல்வார்கள். உங்கள் ஸப்புகளை நெருக்கிவையுங்கள். உங்களுடைய கைகளை ஒருவருக்கொருவர் இடிக்காமல் மெல்லினமாக்கி வையுங்கள். இடையில் ஷைத்தான் புகுதாமலிருக்கிறதற்காக இடைகளை அடைத்துக் கொள்ளுங்கள். யாராவது இடங்கிடந்ததைத் தேடிப்பார்த்து அடைத்து நிற்பானேயானால், அவனுக்கு அல்லாஹுத் தஆலா ஒரு தரஜாவை உயர்த்திவிடுவான் என்றும், உங்களிலொருவன் இமாமுக்கு முன்பாகத் தலையை யுயர்த்தினால் அல்லது வைத்தால் அவன் தொழுகையை அல்லாஹுத் தஆலா ஒப்புக்கொள்ளமாட்டானென்றும், ஒரு ஸப்பை ஒரு மனிதன சேர்ந்தால் அல்லாஹுத் தஆலா அவனை சேர்த்துக்கொள்வான். முறித்தால் அவனை அல்லாஹுத் தஆலா முறித்து விடுவான் என்றுந் திருவுளமானார்கள்.

ஹதீது.

ஒருநாள் அப்துல்லா ஹிப்னு உம்மி மக்தூம் றலியல்லாஹு அன்ஹு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம் வந்து அல்லாவுடைய றசூலே! இந்த மதீனமோ புழுப்பூச்சிகள் மிகுதமாகவும் ஐவாய் மிருகங்கள் அதிகமாகவு மிருக்கிறது. நானோ கண் தெரியாதவனாகவும் வீடு தூரமானதாகவு மிருக்கிறேன். ஆனால், எனக்கொரு கோல்காட்டியிருந்தும் சில நேரங்களில் எங்கேபாவது போய்விடுகிறான். எனக்கு இவ்விதமிருப்பதால் நான் ஜமாஅத்தை விட்டு வீட்டில் தொழும்படி எனக்கு உத்திரவுண்டா? வென்று கேட்க அதற்கு உமக்கு பாங்கு சத்தம் கேட்குமா? வென்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கேட்டார்கள். அதற்கு ஆமென்றார்; உடனே உமக்கு ஜமாஅத்தைவிட உத்திரவில்லை. ஜமாஅத்திற்கு ஹாஸிருக வேண்டுமென்று நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளம்பற்றினார்கள். ஆனதைப்பற்றியே இமாம் ஜமாஅத்துடன் தொழுகிறது ஆண்பிள்ளைகளுக்குப் பலவந்தமான சுன்னத்தாயிருக்கும். மேலும பலமான சொல்படி வாஜிபாகயிருக்கும்.

இனி ஜமாத்தில் குறைந்த ஒரு முக்தகியும் இமாமுமா யிருக்கும். ஆனபோதே ஒரு முக்ததியைக்கொண்டு ஜமாஅத்தா டைய வரிசை உண்டாகிவிடும். ஒவ்வொரு முக்ததீ ஆக்கிலாகிய சிறு பிள்ளையானாலும் பெண்பிள்ளையானாலும் வீட்டிலானாலும் ஒக்கும்.

ஸலாத்துல் ஜமாஅத்தி.

ஜமாஅத்துடைய தொழுகையாகிறது பறுலான அதாவான தொழுகையில் இமாம் ஜமாஅத்தாகத் தொழுவது சுன்னத்து முஅக்கதாவாயிருக்கும். நவவி றஹிமஹுல்லாவுடைய சொல் படிக்கு அது பறுலுக் கிபாயாவாகயிருக்கும். ஒரு ஊரில் ஒரு தலத்திலாவது இமாம் ஜமாஅத்து நடக்காவிட்டால் அடங்கலும் பாவியாவார்களென்று வந்திருக்கிறது.

(பறஉ) ஜமாஅத்தில் குறைந்தது ஒரு இமாமும் ஒரு மஃமூ மாயிருக்கும். மஃமூம் பெண் பிள்ளையாயிருக்கிலும் சிறு பிள்ளையா யிருக்கிலும் சரி. பள்ளி அல்லாததில் மிகுந்த ஜமாஅத்தும் பள்ளியில் குறைந்த ஜமாஅத்தும் காணப்படுமாகில் இப்னு ஹஜர் றஹிமஹுல்லாவுடைய சொல்படிக்கு பள்ளியில் தொழுவது ஏற்றம்.

(பறஉ) ஒருவன் தன் வீட்டில் பெண்ஜாதி பிள்ளையுடன் தொழுதால் அவர்களுக்கு ஜமாஅத்துடைய பலன் கிடைக்குமென் றிருந்தால் அவன் வீட்டில் அவர்களுடன் தொழுவதுதான் ஏற்றம்.

இமாமைத் தொடர்வதற்கு ஏழு ஷறுத்துகளுண்டு.

ஒன்றுவது, இந்த இமாமைத்தொடர்ந்தேன் என்று அவ்வல் தக்பீரில் நிய்யத்துவைக்கிறது. இரண்டாவது, நிற்குந்தலத்தில் இமாமின் குதிக்காலைக்காண மஃமூனின் குதி முந்தாதிருக்கிறது. மூன்றுவது இமாம் குறிவதை பெயர்வதை யறிகிறது. நாலாவது இமாமும் மஃமூமும் ஒரு தலத்தில் சேகரமாகிறது. ஐந்தாவது இமாமுக்கு ஒத்துமையாகிறது. ஆறுவது செயலானுள்ள பறுலு களில் தொடர் பிடியாக இரண்டு பறுலுக்கு யாதொரு சங்கட மின்றி இமாமுக்குப் பிந்தாமலிருக்கிறது. ஏழாவது நிறப்பமான இரண்டு பறுலுக்கு இமாமைப் பார்க்கிலும் முந்தாதிருக்கிறது.

இமாமுக்குப் பாத்திரமானவர்கள்.

ஒன்றுவது தொழுகையுடைய மஸ்அலாக்களை அறிந்த பிக்ஹு டையான். இரண்டாவது தஜ்வீதுடைய காயிதாப்படிக்கு மக்றஜு முதலானவைகளை யறிந்தோதும் காரீ. மூன்றுவது, ஹாபிலு. நாலாவது மிருந்த பேணுதலுடைய நுணுக்கமுடையான். ஐந்தாவது வங்கிஷப்பதியான். ஆறுவது வயதாளி ஆக இவர்களை இவர்களல்லாதவர்களைக்காண முற்படுத்தப்படும்.

துடர்தல் ஸிஹ்ஹத்தில்லாத இமாம்கள்.

ஒன்றுவது மஃமுமுடைய எண்ணத்தில் இமாமுடைய தொழுகை பாத்திலென்றிருக்க அந்த இமாமைத் துயர்வதும், இரண்டாவது பாத்திஹாவில் இவனைக்காண மோசமாய் ஓதுகிற வனையும் மூன்றுவது இன்னொரு இமாமைத் துடர்ந்து தொழுதுக் கொண்டிருக்கிறவனையும், நாலாவது, ஐந்தாம் றக்அத்தில் மறதியாக எழுந்து நிற்கிறவனையும், ஐந்தாவது, ஒரு ஹறுபை மறு ஹறுபாக பதலாக்கிறவனையும், ஆறுவது, இத்காமின தலமல்லாத்தத்தில் இத்காம் செய்கிறவனையும்; ஏழாவது, மஃனுவைப் பேதகமாக்கும்படி பிழையாய் ஓதுகிறவனையும், எட்டாவது ஆண்பிள்ளையானவன் பெண்பிள்ளையையும், ஒன்பதாவது, உடுமானத்தின் வெளிப்புறத்தில் நஜீஸுண்டாயிருக்கிறவனையும் துடர்வது ஸிஹ்ஹத்தல்ல.

துடருதல் மக்றூஹான இமாம்கள்.

ஒன்றுவது, பாசிகானவன். இரண்டாவது, மிருகி வஸ்வாஸுள்ளவன். மூன்றுவது, கத்னயில்லாதவன். நாலாவது மஃனு பேதலிப்பாகப் பிழைபாய் ஓதுகிறவன். ஆக இந்த நால்வரைத் துடர்வதும் மக்றூஹு. ஸினுவினல் பிறந்தவனைத் துடர்வது ஏற்றத்துக்கு மாற்றமாயிருக்கும்.

ஸப்புகளின் வரிசைகள்.

அனசு றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் றிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது; அவர்கள் சொன்னார்கள். "றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளம்பற்றினர்கள், உங்களுடைய ஸப்புகளைச் சரியாக்குங்கள். ஏனெனில், திட்டமாக

ஸப்புகளைச் சரியாக்குகிறது தொழுகையை செவ்வையாக்குகிறதில் நின்றுமா யிருக்கும்'' என்று. இன்னுமவர்களைத் தொட்டும் றிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் சொன்னார்கள். றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானார்கள். "உங்களுடைய ஸப்புகளை நெருக்குங்கள். இன்னும் அவைகளுக்கிடையில் முடுகுதலாக்குங்கள். இன்னும் கழுத்துகளைக்கொண்டு நேராக்குங்கள். ஏனெனில் என்னுடைய நப்ஸு அவன் வசத்திலிருக்கிறதே அந்த நாயன்பேரில் சத்தியமாகத் திட்டமாக நான் ஷைத்தானை ஸப்பின் இடையில் நின்றும் அவன் கறுத்த ஆட்டைப் போல் புகுதக்கண்டேன்'' என்று இதை அபூதாவூது றிவாயத்துச் செய்தார்கள்.

ஆகையால் ஸப்பு நிற்கிறதில் இடைவரியை அடைத்து சிலர் சிலரோடு சேர்த்து தோட்புயங்களைச் சரியாக்க வேண்டும். அது கொண்டு இமாமும் அவர்களை ஏவவேண்டும். இன்னும் ஸப்பு நிற்கிறதில் முக்ததீ யொருவனிருந்தால், அவன் சிறு பிள்ளையானாலும் பெரியவனானாலும் இமாமுடைய வலது பாகத்தில் இடைவிடாமல் முந்தாமலும் பிந்தாமலும் குதிக்காலைச் சரியாக வைத்து நிற்கவேண்டும்.

பாபுன் பீ பலீலத்துல் வித்றி வன்னவாபில்.

வித்றுத் தொழுகையுடைய வரிசையிலும் சுன்னத்துத் தொழுகையுடைய வரிசையிலும் பேசும் பாடம்.

ஹதீது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளம்பற்றினார்கள். இரவில் உங்களுடைய தொழுகையில் கடைசியானதை வித்றாக்கிக் கொள்ளுங்கள்; வித்றைக்கொண்டும் ஸுப்ஹை முந்துங்கள். யாராகிலுமொருவன் இரவிறுடுக்கத்தில் நின்று அவன் எழும்ப மாட்டானென்பதை பயந்தானாகில் அதன் துவக்கத்தில் அவன் வித்றுத் தொழவும். இன்னும் யாராகிலும் மொருவன் அதனுடுக்கத்தில் அவன் எழும்புவதை அவ்வேட்கையானானாகில் இரவின் ஒடுக்கத்தில் அவன் வித்றுத் தொழவும். ஏனெனில்

உறுதியாக இரவின் ஒடுக்கத்தின் தொழுகையாகிறது ஹாஸிருக் கப்பட்டதாயும் மிக்க வரிசையானதாயு மிருக்கும். என்று திருவுள மானார்கள்.

இன்னும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுள மானார்கள், சிவந்த ஒட்டகத்தைக்காண கைரு பிருக்குமே அப்படிக் கொற்ற தொழுகையைக்கொண்டு அல்லாஹுத் தஆலா உங்களுக்கு உபகாரஞ் செய்திருக்கிறான். அதாவது வித்ரு ருக்கும் அதை அல்லாஹு தஆலா இஷாவுக்கும் பஜ்றுக்கு மிடையில் வைத்திருக் கிறானென்று திருவுளமானார்கள்.

இன்னும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளம் பற்றினார்கள், மனிதர்களே! உங்களுடைய பறுலான தொழுகை யின் கூலியை நிறப்பப்படுகிறதற்காகவேண்டி நப்லான வணக்கங் களை நிறைவேற்றி வாருங்களென்று திருவுளம்பற்றினார்கள்.

இன்னும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளம் பற்றினார்கள் யாராகிலுமொருவன் என்னுடைய சுன்னத்தையு வந்தால் என்னையுவந்தான். என்னையுவந்தவன் சொர்க்கத்தில் என்னுடனிருப்பான். இன்னும் என்னுடைய சுன்னத்தை விட்ட வன் என்னில் நின்று முள்ளவனில்லை என்று திருவுளமானார்கள்.

வித்றுத் தொழுகையுடைய ஹுக்முகள்.

வித்றுத் தொழுகையாகிறது அதன் வக்து இஷாத் தொழுத பிறகு மேவெள்ளை வெளுக்கும் வரையிலாயிருக்கும். அதில் குறைந் தது ஒரு றக்அத்து. தீர்மானம் பதினொரு றக்அத்து, அதின் நிறப்பத்தில் தாழ்ந்தது மூன்று, அதிலும் நிறப்பம் ஏழு. அதிலும் நிறப்பம் ஒன்பது, அதிலும் நிறப்பம் பதினொன்று, வித்றென்கிற நாட்டத்தை வைத்துக்கொண்டு பதினொரு றக்அத்தை காண அதிகமாக்குதல் ஜாயிஸில்லை. துவர்க்கத்தில் தானே இத்தனை றக்அத்து தொழுவேன் என்று குறிப்பிடாதிடினும் பதினொரு றக்அத்துத் தொழலாம்.

(பறூ) எல்லா இவ்விரண்டு றக்அத்திலும் ஸலாம் வாங்கி பிரிததுத் தொழுவது ஸலாம் வாங்காமல் சேர்த்துக் தொழுவதி லும் ஏற்றம். மக்ரிபுத்தொழுகையைப்போல் மூனறு றக்அத்தை

யும் சேர்த்து தொழுவது மக்றூஹு, இரண்டு றக்அத்தைச் சேர்த்தும் ஒரு றக்அததைப் பிரித்தும் தொழவேண்டும்.

பாபுன் பீப்லாயிலித்தருவீஹ்.

தருவீஹ்த் தொழுகையுடைய வரிசையிலே பேசும் பாடம்.

ஹதீது.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானார்கள் :- யாராகிலுமொருவன் றமலான் மாதத்தின் இரவையில் முழித்து ஸவாபைத் தேடினவனாகவும் அதை யுறுதி கொண்டவனாகவும் நல்லான வணக்கங்களை வணங்கினால், அவனுடைய முந்தின பாவங்களை அல்லாஹுத் தஆலா பொறுத்துக் கொள்வான் என்று திருவுளமானார்கள்.

இன்னும் அலிறலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள் :— "றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானார்கள். அறுஷைச்சுற்றி (கலீறத்துல் குத்ஸென்னும்) ஓர் தலமுண்டாயிருக்கிறது, அதில் மட்டிலங்காத மலக்குகளிருந்து ஓயாமல் நாயனை வணங்குகிறார்கள், றமலானுடைய இரவுகளானால் பூமியிலிறங்கி அதமுடைய மக்களோடு தொழுவதற்க்காக நாயனிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு எல்லா இரவிலு மிறங்கிறார்கள். ஆகையால் அவர்களுடைய மேனி யொருவனில் பட்டாலும், அல்லது ஒருவனுடைய மேனி அவர்களில் பட்டாலும் அவன் சீதே வித்தனம் பெற்றுக்கொள்வான், அவனுக்கு மூதே வித்தனமே யில்லை" என்று. இந்த ஹதீதை அலிறலியல்லாஹு அன்ஹுவில் நின்றும் உமறு றலியல்லாஹு அன்ஹு கேள்க்கவே இதற்கு நாம்மெத்த பாத்திபமென்று சொல்லி மனிதர்களைச் சேகரித்துத் தருவீஹை நடத்தினார்கள்.

தருவீஹுத் தொழுகையின் ஹுக்முகள்.

தருவீஹுத் தொழுகையாகிறது றமலான் மாதம் இரவுகளில் இஷாவுக்குப் பிறகு பத்து ஸலாம் இருபது றக்ஆத்து ஜாமஆத்தாய் தொழுவது ஸுன்னத்து ஜமாஅத்துக் கிடையா விட்டால் தனியே தொழுவது ஸுன்னத்து. எல்லா றக்அத்திலும் ஸூறு ஸுன்னத் தென்பதில் குறுஆனைத் துவக்கமிருந்து நாள்தோறும்

தறுத்தீபாக ஓதித் தமா மாக்கிறது முஸ்தஹப்பாக்கப்படும். எல்லா ஒவ்வொரு ஸலாம் தொழுத பிறகு கலிமா ஓதி ஸலவாத் ஓது கிறதும் எல்லா ரவ்வண்டு ஸலாமுக்குப்பின் ஒழுங்காக நாலு யார் களைக் குறித்து அவர்களைத் தொட்டும் றிலுவான் கூறுகிறதும் புகழப்பட்ட உறுபாயிருக்கும்.

(பாரிதா) றமலான் முந்தின பத்தில் அல்லாவுடைய றஹ்மத் தென்னும் கிருபையையும், நடுப்பத்தில் அல்லாவுடைய மக்பிறத் தென்னும் பொறுக்குதலையும், பிற்பத்தில் அல்லாவுடைய இத் கென்னும் நரகத்தை விட்டும் உரிமை யாகுவதையும் கேள்பது முஸ்தஹப்பு.

லுஹாத் தொழுகையின் விவரம்.

அதாவது, பொழுது வல்லேபப்பிரமாண முயர்ந்த நேரமுதல் மத்தியானம் வரையில் லுஹாத் தொழுகிறது ஸுன்னத்து. அதில் ஏற்றமான வக்த்தாகிறது ஒரு ஜாமம் சென்றவுடனா ருக்கும். அது இரண்டு றக்அத்து முதல் எட்டு றக்அத்து வரையிலுமா யிருக்கும் இதைப் பள்ளியில் தொழுவது அப்லலாயிருக்கும்.

தஹிய்யத்துல் மஸ்ஜிதித் தொழுகை விவரம்.

அதாவது பள்ளியில் புகுந்தவுடன் உட்காருமுன் பள்ளிக்குக் காணிக்கையாக இரண்டு றக்அத்துத் தொழுவது ஸுன்னத்து. தெரியாத்தனமாய் அல்லது மறதியாய் அல்லது தண்ணீர் குடிக்கிற ஹாஜத்துபோல் கொத்ததுக்காய் இருக்கிறதால் தப்பாகாது.

இஸ்த்திகாறுத் தொழுகையின் விவரம்.

அதாவது, அல்லாஹுத் தஆலாயிடத்தில் கைறுதேடி ஒரு கச்சவடம், ஸபர், வீடுகட்டுகிறது, வீடு குடிபுகுதுகிறது, நிக்காஹு முடிக்கிறது, இப்படிக்கொற்ற நலவான காரியத்தை துவக்கஞ் செய்யும்போதும்; கப்பல் தோணி இதுகளிலேறும் போதும், பண வறை வீட்டில் ஜிமாவுக்கு முன் புதுமாப்பிள்ளையும் பெண்ணும் இன்னும் தான் ஒரு நாளும் போகாத பூமிக்குப் போனாலும், முழுதும் காபிர்கள் குடியிருக்கிற தலத்திற்குப் போனாலும், இரண்டு றக்அத்து தொழுதுக் கொள்வது ஸுன்னத்து.

அவ்வாபீன் தொழுகையின் விவரம்.

அதாவது, மக்ரிபுக்கும் இஷாவுக்கு மிடையில் மக்ரிபுடைய ஸுன்னத்து தொழுகை லிக்ற அவ்ருதுகளுக்குப் பின் (ஸலாத்துல் அவ்வாபீன்) என்று இருபது றக்அத்து ஸுன்னத்தாக்கப் படும் அஃது ஆறு றக்அத்தென்றும், நாலு றக்அத்தென்றும் குறைந்தது இரண்டு றக்அத்தென்றும் வருகின்றது.

தஸ்பீஹுத் தொழுகையின் விவரம்.

அதாவது, நாள் தோறும் தொழுவது ஸுன்னத்து, அப்படிக்கில்லா விட்டால் ஏழு நாளைக் கொருவிடுத்தம், அல்லது, ஒரு மாதத்திற்கொருதரம் அல்லது ஒரு வருடத்திற்கொருதரம் அல்லது வாணுளிலொருதரம் தொழுவது ஸுன்னத்து. அது நாலு றக்அத்து இரண்டு ஸலாமில் தொழுவது ஏற்றமாகும். நாலு றக்அத்தையும் ஒரு ஸலாமிலும் தொழலாம்.

தஹஜ்ஜுதுத் தொழுகையின் விவரம்.

அதாவது, இரவிலுறங்கி முழித்துத் தொழுவது தஹஜ்ஜு தென்கிற ஸுன்னத்துத் தொழுகையாயிருக்கும். எங்கிலும் ஸஹாபிய்யாக்கள் பற்லைப்போலே காண்பார்கள். அதில் குறைந்தது இரண்டு றக்அத்து மிகுந்தது மட்டில்லை. பன்னிரண்டு றக்அத் தென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இரண்டு பெருநாள் தொழுகையின் விவரம்.

அதாவது, இமாம் ஜமாஅத்தை ஷர்ஆக்கப்பட்ட ஸுன்னத்தான தொழுகையாயிருக்கும். இரண்டு பெருநாள் தொழுகை தக்பீறு கட்டி (வஜ்ஜஹ்த்து) ஓதியபின் அஊது ஓத முதல் கையை உயர்த்தி ஏழு தக்பீறு கட்டவும். பிந்தின றக்அத்தில் நின்றவுடன் அஊது ஓத முதல் ஐந்துதரம் கையை யுயர்த்தி தக்பீறு கட்டி ஆதத்துபோல் தொழவும், இந்தத் தக்பீறக்கிடையில் (ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்துலில்லாஹி வலா இலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்) என்ற கலிமாவை ஓதிக்கொள்ளவும்.

(பறஉ) இரண்டு பெருநாள் தொழுகைக்குப்பின் இரண்டு குத்பா ஓதுகிறது ஸுன்னத்து. முந்தின குத்பாவை ஒன்பது

தக்பீறுகொண்டும், இரண்டாம் குத்பாவை ஏழு தக்பீறுகொண்டும் துடங்குகிறது ஸுன்னத்து.

(பறஉ) இரண்டு பெருநாள் தொழுகையின் வக்தாகிறது பொழுது உதித்த நேரமுதல் ஸவாலாகும் வரையிலாயிருக்கும். ஏற்றமான நேரம் லுஹாவின் வக்தாயிருக்கும்.

கிராணத் தொழுகையின் விவரம்.

அஃதாவது, சூரியன் சந்திரன் கிராணத்தின் தொழுகை ஸுன்னத்தாக்கப்படும். இமாம் ஜமா அத்தாய்த் தொழுவதையும் தொழுகைக்குப் பின் இரண்டு குத்பா ஓதுவதையும் ஷர்ஆக்கப்பட்டிருக்கிறது. கிராணம் பிடித்த நேரமுதல் வெளி வாங்குகிறதற்கிடையில் லுஹரின் ஸுன்னத்தைப்போல் இரண்டு றக்அத்துத் தொழுவது ஸுன்னத்தென்பதில் வளமையைப்போல் ருகூஃசெய்தபின் மறுபடி ருகூஃஐயும் ஒரு நிலையையும் அதிகமாக்கப்படும். இதை பெரிய கிதாபில் பார்த்துக்கொள்ளவும்.

மழைதேடித் தொழுகிற தொழுகையின் விவரம்.

அஃதாவது, ஊரில் மழை குறைந்தாலும், தண்ணீர் குறைந்து போனாலும், கசந்துபோனாலும், அந்த ஊரின் இராஜாவாவது அல்லது ஹாக்கிமாவது மனிதர்களை மூன்றுநாள் நோன்பு பிடிக்கச் செய்து நாலாம்நாள் நோன்புபிடித்தவர்களாக தாழ்மையான உடையணிந்து மிக்கச்சாளயப்பாடாய் இஸ்திக்பாறை அதிகமாக்கினவர்களாய்ச் சிறுபிள்ளைகளும் பெரியவர்களும் ஸாலிஹீன்களும் ஆடு,மாடு ஒட்டகங்களிவைகளையும் உடைந்தையாய்க் கூட்டிக்கொண்டு ஒரு மைதானிர்சென்று அல்லாஹுத் தஆலாவினிடத்தில் மழை தேடி இமாம் ஜமாஅத்தாய் இரண்டு றக்அத்து தொழுவது ஸுன்னத்து. பின்பு பெருநாள் குத்பாவைப்போல் இரண்டு குத்பா ஓதுவதில் தக்பீறுக்கு பதிலாக இஸ்திக்பாறை ஓதிக்கொள்ளவும்.

கலாத் தொழுகையின் விவரம்.

அஃதாவது; யாதொரு உதரில்லாமல் தப்பின பறுலான தொழுகையை கலாச்செய்வதில் விரைந்துகொள்வது வாஜிபு. தூக்கம்போல் ஒரு உதரினால் தப்பின தொழுகையை கலாச்செய்வதில் விரைந்துக்கொள்வது ஸுன்னத்து. பலநாள் தொழுகை

ஓரே ஒழுங்காய் கலாவாகிப் போயிருந்தால் தறுத்தீபு ஸுன்னத்து. ஹாலிறத்தான தொழுகை கலாவாகிப் போகிறதாயிருந்தால் அதைத்தானே விரைந்துக்கொள்வது வாஜிபு.

(பறஉ) பறுலு கலாவுண்டாயிருப்பவர்கள் தங்கள் நிர்வாகத்திற்குத் தேவையான சம்பாத்தியஞ் செய்கிறநேரம், உறங்குகிற நேரம், கலாஹாஜத்து இஸ்நிஞ்ஜா ஊண், தீண்கொண்டு பராக்காகிற நேரந்தவிர மற்ற நேரமடங்கலும் கலாச்செய்வது வாஜீபு. இவ்விதம் கலாவை இறுக்காமலும் நேரத்தை வீண் போக்காமலும், பறுலுக்கிபாயா ஸுன்னத்துத் தொழுகை ஷிக்று ஸலவாத்து குறுஆனோதல், இதில் நேரத்தை செலவழிப்பதும் ஹறாம்.

பாபுன்பீ ஸலாத்துல் முஸாபிர்.

ஸபறுத் தொழுகையில் பேசும் பாடம். அதாவது ஆமான கருமத்தை நாடி ஒட்டகையின் நிதான நடையாக இரண்டு நாளைத் தூரத்திற்குச் சரியான ஒரு குறிப்பான தலத்தை நாடிக்கடலில் அல்லது கரையில் ஸபறுபோகிறவன், அவன் பேரில்விதித்த நாலு றக்அத்துத் தொழுகை, அதாவாகிலும் அல்லது ஸபரில் கலாவாகிலுஞ் சரி. இரண்டு றக்அத்தாகச் சுருக்கித் தொழுவதும், லுஹறு அஸறையும், மக்ரிபு இஷாவையும், முற்படுத்தி அல்லது பிற்படுத்திச் சேர்த்துச் தொழுவதும் ஆமாயிருக்கும். ஹறுமை நாடி ஸபறு செய்பவனுக்கு கஸ்று ஜம்வு தொழுவதை எழிதாக்க (ஐ) ஆமாக்கப்படவில்லை.

(பாயிதா) இரண்டு நாளைத் தூரமென்பது, ஹாஷிமீ காதம் பதினாறாயிருக்கும். காதமென்பது மூன்று நாழிகை தூரமாயிருக்கும் அந்த நாழிகையிலொன்றாகிறது ஆயிரமுளமாயிருக்கும்.

கஸ்றுத் தொழுகைக்கு ஷறுத்துகள் ஏழு.

ஒன்றாவது, ஒரு இரவு பகல் தூரத்துக்கு ஆகுமான ஸபறு போகிறது. இரண்டாவது, நிறப்பமாய் தொழுகிறவனைத் தொடர்ந்து தொழாமலிருக்கிறது. மூன்றாவது, முஸாபிறோ முகீமோவென்ச் சந்தேகமுள்ளவனைத் தொடர்ந்து தொழாதிருக்கிறது. நான்காவது தக்பீறுடனே கஸ்றை நிய்யத்துச் செய்கிறது. ஐந்தாவது, கஸ்றின் நிய்யத்தில் திட்டமாகவும் பேதகமில்லாமலும் தொழுது முடிக்கிற

பரியந்தம் தரிபாடாக விருக்கிறது. ஆறுவது தொழுகையில் துவர்க்கர் தொடுத்து முடிவு பரியந்தம் சபறு நேரமாயிருக்கிறது. ஏழாவது கஸ்றுத் தொழுகிறது ஆகுமென்று அறிகிறது.

ஜம்உ தக்தீமுக்கு ஷறுத்துகள் நாலு.

ஒன்றுவது முந்தினதை முந்தியும் பிந்தினதைப் பிந்தியும் தறுத்தீபாய் தொழுகிறது. இரண்டாவது முந்தின தொழுகை யுடனே பிந்தின தொழுகையைச் சேர்த்துத் தொழுகிறதை முந்தின தொழுகையிலேயே நிய்யத்துவைக்கிறது. மூன்றுவது இரண்டு தொழுகைகளையும் தொடர் பிடியாய்த் தொழுகிறது. நான்காவது முந்தின தொழுகையின் முதல் தக்பீறு முதல் தொழுது முடிக்கிறவரையிலும் ஸபறு நேமமாயிருக்கிறது.

ஜம்உத் தஃகீறுக்கு ஷறுத்துகளிரண்டு.

அவைகளில் ஒன்றுவது முந்தின தொழுகையின் பக்கத்தில் ஒரு றக்அத்துக் குறையாமல் தொழுகிற நேரம் பாக்கியாயிருக்கும் போதே ஜம்உத் தஃகீறை நிய்யத்துச் செய்கிறதும், இரண்டாவது பிந்தின இரண்டாவது தொழுகையைத் தொழுது முடிக்கிறவரை யிலும் ஸபறு நேமமாயிருக்கிறதுமாயிருக்கும்.

பாபுன் பீபலாதுல் ஜும்அத்தி.
ஜும்ஆவுடைய வரிசை பேசும் பாடம்.

(காலல்லாஹுத் தஆலா) (யாஅய்யுஹல்லதீன ஆமனூ இதா நூதிய லிஸ்ஸலாத்தி மின் யவ்மில் ஜும்அத்தி பஸ்அவ் இலாதிக் ரில்லாஹி வதறுல் பைஅ தாலிக்கும் கைறுன் லக்கும் • இன்குன் துன் தஃலமூன்) ஓ! ஈமான் கொண்டவர்களே! ஜும்ஆவுடைய நாளில் நின்றும் தொழுகை அளவிற் கூப்பிடப்பட்டால் நீங்கள் அல்லாவுடைய திக்றளவிற் செல்லுங்கள். இதன் கருத்தாவது தொழுகை அளவிற் செல்லுங்கள். கொள்வினை விற்பனைகளை விட்டு விடுங்கள். நீங்கள் அறிவுடையவர்களாயிருந்தாலவைகளை விட்டுவிட்டு நீங்கள் தொழுகையளவிற் செல்லுகிறது உங்களுக்கு கைறு யிருக்குமென்று அல்லாஹுத் தஆலா குறுஆன் ஷரீபில் திருவுளமாயிருக்கிறுன்.

ஹதீது.

யாராகிலும் மொருவன் ஜனாபத்துடைய முழுக்கைப்போல் ஜும்ஆவுடைய நாளில் முழுகிவிட்டு அவன் முந்தின ஸாஅத்தில் ஜும்ஆவுக்குப் போனானேயானால் அவனுக்கு ஒரு ஒட்டகத்தைக் குறுபான் கொடுத்த தவாபையும் இரண்டாவது ஸாஅத்தில்போனானேயானால் அவனுக்கு ஒருமாட்டைக் குறுபான் கொடுத்த தவாபையும், மூன்றாம் ஸாஅத்தில் போனானேயானால் அவனுக்குக் கொம்பையுடைய ஒரு தும்பையாட்டைக் குறுபான் கொடுத்த தவாபையும், நான்காம் ஸாஅத்திற் போனானேயானால் அவனுக்குக் கோழி, சேவல் இவைகளிலொன்றைக் குறுபான் கொடுத்த தவாபையும், ஐந்தாம் ஸாஅத்திற்போனானேயானால் அவனுக்கு ஒருமுட்டையைக் குறுபான் கொடுத்த தவாபையும் எழுதப்படும். இனி இமாம் வந்து விட்டால் மலக்குகள் தவாபை யெழுதுங் கடிதங்களைச் சுருட்டி விடுவார்கள் தவாபுகளை யெழுத மாட்டார்கள் குத்பாவைக் கேட்டுக்கொண்டிருப் பார்களென்று றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளம் பற்றினார்கள்.

இன்னும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஜும்ஆவுடைய நாளாகிறது இரண்டு பெருநாள்களைப் பார்க்கிலும், மற்ற நாட்களடங்கலைப் பார்க்கிலும் ஏற்றமான நாளாயிருக்கும். ஆனகையால் அடிமைகள், பெண்பிள்ளைகள், சிறு குழந்தைகள், பிணியாளர்கள் இந்நான்கு பேர்களைத் தவிர மற்றுமுள்ள ஒவ்வொரு முஸ்லிமான மனுடர்கள் பேரிலும் அந்நாள் தொழுகையானது கடமையாயிருக்கும். ஆனதால் யாராகிலுமொரு மனிதன் தங்கடமின்றியே அந்தத் தொழுகையை விடுவானாகில் அவனுடைய கருமத்தில் பறக்கத்துமில்லை. அவனுக்கு ஹஜ்ஜுடைய பலனுமில்லை. ஸதகாவுடைய நன்மையுமில்லை, தொழுகையுடைய வரிசையுமில்லை இன்னும் அல்லாஹுத் தஆலா அவனுக்கு என்னுடைய ஷபாஅத்தைக் கொடுக்கவு மாட்டான், அவனுடைய இபாதத்தை அல்லாஹுத் தஆலா ஒப்புக் கொள்ளவு மாட்டானென்றும், இன்னும் ஜும்ஆவாகிறது பகீறுகளுக்கு ஹஜ்ஜாகவும், மிஸ்கீன்களுக்குப் பெருநாளாகவுமிருக்குமென்றும் திருவுளமானார்கள்.

இனி முஅஸ்ஸின் பாங்கு சொன்னவுடன் வியாபாரத் தொழில்களடங்கலையும் விட்டு விட்டு ஜும்ஆவுக்குப் போகவேண்டியது

வாஜிபாயிருக்கும். ஆனால் அதபும் ஒடுங்குதனுமாகச் சங்கையுடன் காலால் நடந்துபோகிறதே எற்றமாயிருக்கும், பாங்கு சொன்னது முதல் தொழுது முடிகிறவரையிலும் துன்யாவுடைய அமல்களைப் பார்க்கிறது ஹறாமா யிருக்கும்.

ஜும்ஆ விதியாகிறதற்கு ஷறுத்துகள் எழு.

அவைகளில் ஒன்றாவது இஸ்லாமாக இருக்கிறது, இரண்டாவது பாலிகாகி யிருக்கிறது, மூன்றாவது ஆக்கிலாக இருக்கிறது, நான்காவது ஆண்பிள்ளையாக இருக்கிறது, ஐந்தாவது நாட்டான் மகனாக இருகிறது, ஆறாவது நஸல்போ லொத்த தங்கடங்களில்லாம லிருக்கிறது, எழாவது ஊரில் குடிபதியாக இருக்கிறது இவ் வேழுமா யிருக்கும்.

ஜும்ஆவுக்கு ஷறுத்துகள் ஆறு.

அவைகளில் ஒன்றாவது ஊரில் நான்கு எல்கைக்குட்பட்ட தலத்தில் ஜும்ஆ ஆயிருக்கிறது, இரண்டாவது ஜும்ஆத் தொழுது ஸலாம் வாங்கிறவரையிலும் லுஹறுடைய வக்த்து பாக்கியாயிருக்கிறது, மூன்றாவது ஊரில் யாதொரு தங்கடமின்றியே ஒரு ஜும்ஆவுக் கதிகப்படாம லிருக்கிறது, நான்காவது ஜும்ஆ நிறைவேறும்படியான பாத்திஹாவை கதாவில்லாம லோதுகிற பேர்களில் இமாமைச் சேர்த்து நாற்பது பேர்களுக்குக் குறையாமல் ஜமாஅத்துச் சேகரமாகிறது, ஐந்தாவது முந்தின றக்அத்து முழுவதிலும் ஜமாஅத்துத் தரிபட்டிருக்கிறது. ஆனால் இரண்டாம் றக்அத்தின் றுக்கூவுக்குப்பின் வந்து கூடினால் அந்த நிய்யத்துடனே நாலு றக்அத்துத் தொழவேண்டும். ஆறாவது இரண்டு குத்பாவுக்குப் பின்னால் ஜும்ஆத் தொழுகிறது, இவ்வாறுமா இருக்கும்.

இரண்டு குத்பாவிலுமுள்ள ஷறுத்துகள் எழு.

அவைகளில் ஒன்றாவது அந்த குத்பாக்களிலுள்ள பறுலுகளை கதிபுடன் சேர்த்து நாற்பது பேர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறது. இரண்டாவது பறுலுகளை மாத்திரம் அறபுப் பாஷையா லோதுகிறது. மூன்றாவது நிற்கச் சக்தியுள்ள கதீபாக இருந்தால் நிலையில் நின்றோதுகிறது. நான்காவது இரண்டு துடக்கையும்

நஜா ஸத்தையும்விட்டுத் துப்புரவா யிருக்கிறது. ஐந்தாவது அவ்றத்தை மறைக்கிறது. ஆறுவது இரண்டு குத்பாவுக்கு மிடையில் சற்றுநேர முட்கார்ந்து தரிபடுகிறது. ஏழாவது தொடர்ச்சியாக வோதுகிறது இவ்வேழுமாயிருக்கும்.

இரண்டு குத்பாவிலுமுள்ள பறுலுகள் எட்டு.

அவைகளில் ஒன்ருவது (அல்ஹம்து லில்லாஹ்) என்றோது கிறது. இரண்டாவது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர் கள்பீது ஸலவாத்தோதுகிறது. மூன்ருவது ஹாலிரீன்களுக்குத் தக்வாவைக்கொண்டு வஸிய்யத்துச் செய்கிறது. இந்த மூன்றுமாகிறது இரண்டு குத்பாவிலும் பறுலாயிருக்கும். ஆககூடிய பறுலு ஆறுயின. ஏழாவது இரண்டிலொரு குத்பாவில் மக்னவை விளக்கி வைக்கும்படியான ஒரு ஆயத்தை யோதுகிறது. எட்டாவது பிந்தின குத்பாவில் முஃமினுவர்களுக்குத் துஆச் செய்கிறது இந்த எட்டுமா யிருக்கும்

இரண்டு குத்பாவிலுமுள்ள சுன்னத்துகள் ஏழு.

அவைகளில் ஒன்ருவது மின்பறின்பேரி லோதுகிறது. இரண்டாவது கதீபு பள்ளியிற் புகுதும்போதும் மின்பரிலேறும் போதும் மின்பறிலேறி ஜனங்களை முன்னோக்கியபோதும் ஸலாம்சொல்லுகிறது. மூன்ருவது உள்பாங்கு சொல்லும்போது மின்பறின்பேரில் கதீபு ஜனங்களை முன்னோக்கிக் கொண்டிருக் கிறது. நான்காவது குத்பா ஓதுகிறது, ஜனங்களுக்கு நாகரீகமாகவும் நன்றுய் விளங்கும் படியாகவும் நடுத்தரமானதாகவு மிருக்கிறது. ஐந்தாவது கதீபு இடதுகையால் அஸா அல்லது வாள் இவைபோலொத்ததை யூன்றிக்கொள்கிறது. ஆறுவது அஸ்ஹாபிமார்களில் இராஜாக்களாக இருந்தவர்களுக்கும் முஸ்லி மான இராஜாக்களுக்கும் இரண்டாவது குத்பாவில் துஆக் கேட்கிறது. ஏழாவது குத்பா முடிந்தவுடனே இகாமத்துச் சொல்லி முடிய முன் கதீபு மிவ்ருபுக்குள் செல்லுகிறது. ஆக இந்த ஏழுமா யிருக்கும்.

இரண்டு குத்பாவிலும்மக்றூஹாகள் ஏழு.

அவைகளில் ஒன்றுவது குத்பா ஓதும்போது கதீபு திருப்பிப் பார்க்கிறது. இரண்டாவது அவன் கையால் சைக்கினை செய்கிறது; மூன்றுவது மின்பறிலேறும்போது மேற்படி மின்பறிலுள்ள படிகளை அஸாபோலொத்ததைக் கொண்டு தட்டுகிறது. நான்காவது மின்பறி லேறி அதன் பேரிலிருக்க முன் துஆ ஓதுகிறது. ஐந்தாவது மின்பறின் ஒவ்வொரு படிகளிலும் கொஞ்சங் கொஞ்சந்தரிபட்டு துஆ ஓதுகிறது. ஆறுவது இரண்டாம் குத்பாவை மிகவும் தீபரமாகவோதுகிறது. ஏழாவது சுல்தான்களை மிக்க அதிகக்கடப்பாக வருணிக்கிறது இந்த ஏழுமாயிருக்கும்.

பாபுன்பீ பயானில் மையித்தி.

மையித்துடைய பயான்களைப் பேசும் பாடம்.

மையித்தைக் குளிப்பாட்டுகிறதும், கபனிடுகிறதும், தொழுவிக்கிறதும், நல்லடக்கஞ் செய்கிறதும் எல்லா ஒவ்வொரு முஸ்லிம்கள் பேரிலும் பறுலுக்கிபாயாவாக இருக்கும். இது கொண்டு ஏவப்பட்டவர்கள் முஸ்லிமான முக்கல்லபான மனிதர்களாயிருக்கும். ஆனால் தமீஸுள்ள ஒருசிறு குழந்தையானது அந்த நான்கு பறுலுகளையும் செய்துவிட்டால் எல்லா ஒவ்வொருவரைத் தொட்டுமுள்ள பறுலுகளெல்லாம் விழுந்துப் போய்விடும்.

ஜனாஸத் தொழுகையிலுள்ள பறுலுகள் ஏழு.

அவைகளில் ஒன்றுவது நிய்யத்துவைக்கிறது. இரண்டாவது முதல் தக்பீரைச் சேர்த்து நான்குதக்பீறு சொல்லுகிறது. மூன்றுவது நிற்கத் திராணியுள்ளவன் நிற்கிறது. நான்காவது பாத்திஹா வோதுகிறது. ஐந்தாவது இரண்டாம் தக்பீறுக்குப்பின் ஸலவாத் தோதுகிறது. ஆறுவது மூன்றும் தக்பீறுக்குப்பின் மையித்திற்கு ஆகிறத்தின் கருமத்தைக்கொண்டு சொந்தமாக துஆக் கேட்கிறது. ஏழாவது நான்காம் தக்பீறுக்குப்பின் பின் ஸலாம் சொல்லுகிறது இந்த ஏழுமாயிருக்கும்.

மையித்துத் தொழுகையிலுள்ள ஸுன்னத்துகள், ஐந்து.

அவைகளில் ஒன்ருவது:—தக்பீறுகளில் கையை யுயர்த்துகிறது. இரண்டாவது பாத்திஹாவுக்குமுன் அஊது ஓதுகிறது, மூன்ருவது இரண்டாம் தக்பீறில் ஸலவாத்துடனே சலாமையுஞ் சேர்த்தோதுகிறது, நான்காவது மூன்ரும் தக்பீறுக்குப் பின் ஹதீதில் வருகிற துஆவை மையித்திற்குப் பிழைபொறுக்கத் தேடியோதுகிறது, ஐந்தாவது நான்காம் தக்பீறுக்குப் பின் "அல்லாஹும்ம லாத்தஹ்ரிம்னு அஜ்றஹு வலாத்தப்த்தின்னு பஃதஹு வக்பிர்லனு வலஹு' என்றுவோதுகிறது இவ்வைந்துமாயிருக்கும்.

பாபுன் பீபயானிஸ் ஸக்காத்தி
ஸக்காத்துடைய பயான்களைப் பேசும் பாடம்.

(காலல்லாஹுத் தஆலா) "யா அய்யுஹல்லதீன ஆமனூ அன்பிகூ மிம்மா றஸக்னுக்கும் மின்கபுலி அன்யஃத்திய யவ்முன்லாபைஉன்பீஹி வலாகுல்லத்துன் வலாஷபா அத்துன்'' யஃனீ 'ஓ, ஈமான் கொண்ட ஜனங்களே! கொள்வினை, விற்பனை, தோழமை, ஒன்றுக்கொன்று சிப்பாரிசு இவைகளெல்லாம் செல்லாத நாள் வருகிறதற்கு முன்பாக உங்களுக்கு நான் வந்திருக்கிற முதல்களில் நின்றும் ஸக்காத்துக்கொடுங்களென்று அல்லாஹுத் தஆலா திருவுளமானுன் இன்னும் "வல்லதீன யக்னிஸூனஸ்ஸஹப வல்பில்லத்த வலா யுன்பிகூனஹா பீஸபீலில்லாஹி பபஷ்ஷிறுஹும் பிஅதாபின் அலீம், யவ்மயுஹ்மா அலைஹா பீனுரிஜஹன்னம பத்துக்வா பிஹா ஜிபாஹுஹும் வஜுனூபுஹும் வழுஹூறுஹும் ஹாதா மாக்னஸ்தும் லிஅன்புஸிக்கும் பதூகூமாக்குன்தும் தக்னிஸூன்'' யஃனீ தங்கம் வெள்ளி யிவைகளை ஸக்காத்துக் கொடாமல் வைத்திருக்கிறார்களே அவர்களாகிறவர்கள் அந்தத்தங்கம் வெள்ளியை நரகத்து நெருப்பிற் காயவைத்து இவைதான் நீங்களுங்களுக்குப் புதையலாக்கி யிருந்தீர்களேயவைகள். ஆகையால் நீங்கள் புதையலாக்கி வைத்திருந்தீர்களே யவைகளை யுருசிபாருங்களென்று அவர்களுடைய முகங்களிலும் விலாக்களிலும் முதுகு

களிலும் அவைகளைக் கொண்டு சூடு போடப்படுமே அந்த நாளி லுண்டான அதாபைக்கொண்டு அவர்களுக்குச் சோபனம் சொல்லு மென்றூர் திருவுளமானுன்.

ஹதீது.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமானூர்கள்:—ஸக்காத்தை விலக்கினவன் நரகம் புகுதுவான், ஸக்காத்துக் கொடாதவனுக்கு தீனுமில்லை, நோன்புமில்லை, ஹஜ்ஜுமில்லை, ஜிஹாதுமில்லை என்று. இன்னும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், உங்களுடையமுதல்களை ஸகாத்துக் கொடுக்கிறது கொண்டு கார்மானமாக்கிக் கொள்ளுங்கள், நஷலாளிகளுக்கு ஸதகாவைக்கொண்டு மருந்துசெய்து கொள்ளுங்கள், பலாய்முஸீபத்து களுக்குத் தாழ்மையுடனே துஆக்கேட்கிறதுகொண்டு முன்னேக்கிக் கொள்ளுங்களென்று திருவுளம்பற்றிஞர்கள்.

ஸக்காத்து வாஜிபாகிறதற்கு ஷறுத்துகள் ஐந்து.

அவைகளில் ஒன்றுவது இஸ்லாமாயிருக்கிறது, இரண்டாவது நாட்டான் மக்களாயிருக்கிறது, மூன்றுவது தனக்குடையதாயிருக்கிறது, நான்காவது நிஸாபின் தொகையை யெற்றுகிறது, ஐந்தாவது தானியம் கனிவர்க்க மிவைக ளல்லாத்ததில் வருஷம் நிறப்பமாகிறது இந்த ஐந்துமா யிருக்கும்.

ஐந்து வஸ்துக்களின் பேரில் ஸக்காத்து வாஜிபு.

அவைகளில் ஒன்றுவது வெள்ளி, பொன், இரண்டாவது வஜீபனிக்கக்கூடிய கோதுமை நெல் முதலிய தானியங்கள், மூன்றுவது ஈத்தம்பழம் திராட்சைப் பழமென்ற கொடி முந்திரிகைப்பழம், நான்காவது வியாபாரச் சரக்குகள், ஐந்தாவது ஆடுமாடு ஒட்டக மிவைகள் ஆக இவ்வைந்துமாயிருக்கும்.

பொன் வெள்ளி இவைகளின் நிஸாபு.

இருபது கழஞ்சிப் பொன்னிருந்தால் அதில் பத்தில் ஒரு பங்கில் காற்பங்கு அதாகிறது அரைக்கழஞ்சிப் பொன்னும், வெள்ளி

யில் இருநூறு திர்ஹமிருந்தால் அதில் பத்தில்லொரு பங்கில் காற்பங்கு அதாகிறது ஐந்து திர்ஹமும் இதற்கதிகமாக இருந்தால் இதுபோற் கணக்குப் பார்த்துக்கொடுக்கிறது வாஜிபு.

வியாபாரச் சரக்குகளின் நிஸாபு.

வருட முடிவில் சரக்குடைய விலை வெள்ளியில் இருநூறு திற்ஹத்துக்கிருந்தால் அதில் பத்திலொரு பங்கில் காற்பங்கு அதாகிறது ஐந்து திர்ஹமும், மேற்படி விலை பொன்னில் இருபது கழஞ்சிக்கிருந்தால் அதிற் பத்திலொரு பங்கில் காற்பங்கு அதாகிறது அரைக்கழஞ்சியும் இதற்கதிகம்மிருந்தால் இதுபோற் கணக்குப் பார்த்து ஸக்காத்துக் கொடுக்கிறது வாஜிபு.

ஆடு மாடு ஒட்டகை இவைகளின் நிஸாபு.

ஐந்து ஒட்டகைகளிருந்தால் ஒரு வருடமுள்ள ஒரு செம்மறிக் குட்டியும், முப்பது மாடுகளிருந்தால் ஒரு வருடமுள்ள ஒரு காளைக் கன்றும், நாற்பது ஆடுகளிருந்தால் ஒரு வருடமுள்ள ஒரு செம்மறிக்குட்டியும், ஸக்காத்துக் கொடுக்கிறது வாஜிபு. இதற்கதிகமிருந்தால் பெரிய கிதாபுகளைப் பார்த்துகொடுக்கவும்.

கனிவர்க்கங்கள் தானியங்களிவைகளின் நிஸாபு.

கனிவர்க்கங்களில் ஐந்துகோட்டையும், தானியங்களில் வைக்கோல் உமி இவைகளை நீக்கி ஐந்து கோட்டையுமிருந்தால் அவைகள் இரவலில்லாது ஆற்று பாய்ச்சற்போலொத்ததில் விளைந்ததாயிருந்தால் பத்திலொருபங்கு அதாகிறது அரைக்கோட்டையும். இல்லாவிட்டால் இருபதிலொருபங்கு அதாகிறது கால்கோட்டையும் ஸக்காத்துக் கொடுக்கிறது வாஜிபு. இதற்கதிகமிருந்தால் இதுபோற் கணக்குப் பார்த்துக்கொடுக்கவும். ஒரு கோட்டை என்பது மதுராசுப்படிக்கு நூற்றியிருபது படியாயிருக்கும்.

ஸக்காத்துக்கு பறுலு இரண்டு.

அவைகளி லொன்றாவது ஸக்காத்தைக் கொடுக்கும்போது ஸக்காத்தை இருக்கிறேனென்று நிய்யத்து வைக்கிறதும், இரண்டா

வது ஸக்காத்து முதலே ஸக்காத்திற்குப் பாத்திபமானவர்களுக்குக் கொடுக்கிறதுமாயிருக்கும்.

ஸக்காத்தைப் பெற்றுக்கொள்ளப் பாத்திபமானவர்கள் எட்டு.

அவர்களிலொன்றுவது பக்கீறுகள், இரண்டாது மிஸ்கீன்கள், மூன்றுவது தன்டல்காரர்கள், நான்காவது மவ்லா இஸ்லாம்கள், ஐந்தாவது முகாத்திபுகள், ஆறுவது கடன்பட்டவர்கள், ஏழாவது பீசபீல் செய்கிறவர்கள், எட்டாவது முஸாபிறுகள். இந்த எட்டுப்பேர்களுமாயிருக்கும்.

ஸக்காத்தைப் பெற்றுக்கொள்ளப் பாத்திபமில்லாதவர்கள் ஐந்து.

அவர்களிலொன்றுவது முதலினுல், அல்லது தொழிலினுல் சீமானுயிருக்கிறவர்கள், இரண்டாவது முக்காத்திபல்லாத அடிமைகள், மூன்றுவது பனீ ஹாஷீம் பனீ முத்தலிப் அவர்கள் உரிமைவிட்ட மவ்லாக்கள், நான்காவது காபிறுகள், ஐந்தாவது தான் அன்னவஸ்திரங்கொடுக்கக் கடமைபட்டிருக்கப்பட்டவர்கள் இவ்வைந்து பேர்களுமாயிருக்கும்.

பஸ்லுபீ ஸக்காத்தில் பித்றுத்தீ பித்று சக்காத்தின் பிரித்தல்.

அதாகிறது:—யாராவதொருவன் முஸ்லிமான நாட்டான் மகனுயிருந்தால் தனக்கும், தன் பேரில் நபக்கா விதித்தவர்களுக்கும் நோன்புப் பெருநாளிரவு பகல் மட்டுக்குப் போதுமான ஐவேஜுபோக மீறுமென்ற ஐவேஜிருந்தால் தன் பேராலும் தன் பேரில் நபக்கா விதிக்கும் முஸ்லிம் பேராலும் ஒவ்வொருவரைத் தொட்டும் ஒவ்வொரு மரக்கால் வீதம் அந்தந்த ஊர்களில் மிகுதியாய்ப் புழங்கப்பட்ட தானியங்களில் உமி பதர் இவைகளை நீக்கி பித்றுவென்று கொடுப்பது பறுலாயிருக்கும். அதை றமலான் துவக்கந் தொடுத்துக் கொடுக்கலாம். ஒவ்

வொருவரைத் தொட்டும் விதியானதின் அளவாகிறது நெல்லா யிருந்தால் நிதானமான கைபால் இரு கையுங் கூட்டி யள்ளியெட் டுச் சிறங் கும். அரிசியாயிருந்தால் நான்கு சிறங்குமாயிருக்கும்.

பாபுன் பீ பலாஇலுஸ் ஸவ்ம்.
நோன்புடைய வரிசைகளிற் பேசும் பாடம்.

(காலல்லாஹுத் தஆலா) "யா அய்யு ஹல்லதீன ஆமனூ குத்திப அலைக்குமுஸ்ஸியாமு கமா குத்திப அலல்லதீன மின் கபுலிக்கும்" இதன் கருத்தாகிறது ஓ, யீமான் கொண்டவர்களே! உங்கள்பேரில் நோன்பை பறுலாக்கப்பட்டது அதாவது ஆதம் (அலை) முதல கவுங்களுக்கு முன்னுண்டான நபிமார்கள் பேரிலும், உம்மத்துமார்கள் பேரிலும் பறுலாக்கப்பட்டது போலென்று அல்லாஹுத் தஆலா திருவுளமானான். றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமானார்கள், ஐந்து வக்த்துத் தொழுகைகளும், ஒரு ஜும்ஆ முதல் மறுஜும்ஆ வரையிலும் ஒரு றமலான் முதல் மறுறமலான் வரையிலும், இவைகளாகிறது அவை யவைகளுக்கிடையி லுண்டான பாவங்களுக்குத் தெண்ட குற்றமாயிருக்கும். பெரும் பாவத்தைத் தவிர்ந்திருக்குங் காலமெல்லா மென்று.

இன்னும் றசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் திருவுளமானார்கள். யாராகிலுமொருவன் றமலானில் நின்றும் ஒரு நாள் நோன்பு பிடித்தானே யானால் அவன் பாவத்தைவிட்டு நீங்கி அன்று பிறந்த பாலகனைப்போலாகிவிடுவான். அவன் ஹபாத்தாகஇருக்க அவனை விட்டும் அந்த மாதம் புறப்படுமே யானால் மறுவருட மட்டிலும் அவன் பேரில் ஒரு பாவமு எழுதப்பட மாட்டாதென்று.

இன்னும் றசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானார்கள். நோன்பாளியுடைய நித்திரையானது வணக்க மென்றும், அவனுடைய மூச்சானது தஸ்பீஹ் என்றும் அவனு டைய துஆ கபூலானதென்றும், அவனுடையபாவம் பொறுக்கப் பட்டதென்றும், அவனுடைய அமுலுக்கு ஸவாபு இரட்டிப் பாக்கப்பட்ட தென்றும் திருவுளமானார்கள்.

இன்னும் றசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமானார்கள். நோன்பாளிகளின் வாயின்

வாடையாகிறது, அல்லாஹுதஆலாவினிடத்தில் கஸ்தூரி வாடையிலும் மெத்த மண மானதாயிருக்கு மென்று. அதன் கருத்தாகிறது, கியாமத்தில் அவர்களின் வாய்களுடைய வாடையானது கஸ்தூரி வாடையைப்போல் வீச மென்பதாம்.

இன்னும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமானார்கள். நோன்பாளிகள் கபுறுகளை விட்டும் புறப்படும் போது அவர்களுடைய வாய்களில் நின்றும் கஸ்தூரி வாடையைப் பார்க்கிலும் மிகுதி மணமான வாடைகள் வீசும், அதைக் கொண்டவர்களைக் கண்டு பிடித்து அவர்களுக்குத் தீன் மாவை களையும் கஸ்தூரியைக்கொண்டு முத்திரை வைத்த கெண்டிகளையும் கொடுத்து மனுடர்களுடைய வயிறுகள் நிரம்பிய நேரத்தில் நீங்கள் பசித்திருந்தீர்களே ஆகையாலிப்போது புசித்திருங்கள், அவர்கள் தாகந்தீர்ந்திருந்த நேரத்தில் நீங்கள் தாகித்திருந்தீர்களே ஆகையா லிப்போது இதைக் குடித்துத் தாகந் தீருங்கள், அவர்கள் சுகமாக இருந்த நேரத்தில் நீங்கள் வருத்தத்தி லிருந்தீர்களே ஆகையாலிப்போது நீங்கள் சுகத்திலிருங்கள் என்று சொல்லப்படும் அப்போதவர்கள் தின்பார்கள், குடிப்பார்கள், சுகம் பெறுவார்கள், மற்ற மனிடர்கள் கேள்வி கணக்கிலும், தாகத்திலும் வருத்தத்திலு மிருப்பார்களென்று.

இன்னும் றசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் திருவுளமானார்கள். யாராகிலுமொருவன் றமலான் நீருகிற வரையிலும் மக்ரிபும் இஷாவும் ஜமாஅத்தில் தொழுதானே யானால் லைலத்துல் கத்ரில் நின்றும் நிரப்பமான பேறை யெடுத்துக் கொண்டானென்று. இன்னும் திருவுளமானார்கள். யாராகிலு மொருவன் இஷாவுடைய ஜமாஅத்துக்கு ஹாலிருனானே யானால் அவன் றமலானில் நின்றும் லைலத்துல் கத்றை பெற்றுக் கொண்டானென்று.

பஸ்லுன் பீ அஹ்க்காமிஸ் ஸவ்மி.

நோன்புடைய ஹுக்கும்களைப் பேசும் பிரிவு.

அதாவது றமலான் மாதத்து நோன்பாகிறது ஷஃபான் மாதம் முப்பதுநாள் நிரம்புகிறதாலும், முப்பதாவது நாளில் றமலானுடைய பிறைக்காணுகிறதாலும் ஏனுமான, ஆக்கிலான, பாலிகான முஸ்லிம் களுக்கெல்லாம் பேரிலும் நோன்பு பிடிப்பது பறுலாயிருக்கும்.

